யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00

# வலம்புரி
# VALAMPURI

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
**அர்ச்சனா**
**ஜுவலர்ஸ்**
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1504)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 10 வியாழக்கிழமை (22-02-2001) தொலைபேசி: 3378 ஒலி: 65

## ★ புரிந்துணர்வு ஒப்பந்தம் ★ யுத்த நிறுத்த நீடிப்பு

# பாலசிங்கம் - எரிக்சோல்ஹெய்ம் இலண்டனில் பேச்சு நடத்தினர்!

## இவ்வாரம் தூதுவர் கொழும்பு வருவார்?

(லண்டன்)

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் நோர்வேயின் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து சுமார் மூன்று மணிநேரம் பேச்சு நடத்தியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தையின்போது நோர்வே அரசு தயாரித்துள்ள ''புரிந்துணர்வு ஒப்பந்தம்'' தொடர்பாகவும் விடுதலைப்புலிகள் மேலும் ஒரு யுத்தநிறுத்த அறிவிப்பை விடுப்பது தொடர்பாகவும் இருவரும் மனம்விட்டுப்பேசி உள்ளனர். இதனை அடுத்து தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் இவ்வாரத்தில் கொழும்பு வந்து ஜனாதிபதி சந்திரிகாவையும் சந்திக்கவுள்ளார்.

பிரித்தானியாவில் பயங்கரவாதச்சட்டம் நிறைவேற்றப்பட்டபின்னர்கலாநிதிஅன்ரன் பாலசிங்கமும் எரிக்சோல் ஹெய்மும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் லண்டனுக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து உரையாடியுள்ளார்.

நேற்றுமுன்தினம் அவசரமாக லண்டன் விஜயத்தை மேற்கொண்ட எரிக்சோல் ஹெய்ம் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் 3 மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

நேற்று முன்தினம் காலை 11 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை இடம்பெற்ற இச் சந்திப்பின் போது நாளை மறுதினம் 24ந் திகதி

→ 8ஆம் பக்கம் பார்க்க

## யாழ் நகரில் இருகடைகள் முற்றாக எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புதியபஸ் நிலையத்திற்கு தெற்குப்புறமாகவுள்ள கடைத்தொகுதியில் தீ பற்றிக் கொண்டதில் இருகடைகள்முற்றாக எரிந்துநாசமாகின. தீபரவாமல்அங்குநின்றிருந்தஓட்டோ சாரதிகளின் முயற்சியினால் தீஅணைக்கப்பட்டது.

நேற்று மாலை 6.30மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தின் போது சகாதேவன்என்பவரின் பிள்ளையார்கூல்பாரும் தனபாலசிங்கம் என்பவரின்விஜயாதேனீர் கடையுமேமுற்றாக எரிந்து நாசமாகின இத்தீவிபத்தினால் இருகடைகளிலும் இருந்த பலலட்சம்பெறுமதியான பொருட்கள் எரிந்துள்ளது.

இச்சம்பவத்தை அடுத்து யாழ் மாநகரசபையின் தீயணைப்புச் சேவையினருக்கு அறிவிக்கப்பட்ட போதும் காலதாமதமாகவே ஸ்தலத்திற்குவந்து தீயணைப்பில் ஈடுபட்டனர்.

தீ பரவியமைக்கான காரணம் உடனடியாகதெரியவில்லைஎனிலும் தீபற்றிய கடைஒன்றில்உள்ள குக்கரில் இருந்து தீபரவிஇருக்கலாம் என்றும்தெரிவிக்கப்படுகிறது.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## விமானத்தில் கோளாறு

(கொழும்பு)

கட்டுநாயக்காவிமானநிலையத்தில் இருந்துபங்களாதேஷ் நோக்கிப் புறப்பட்டுச்சென்ற சிறிலங்கா எயர்லைன்ஸ் விமானமொன்று இயந்திரக் கோளாறு காரணமாகத் திடீரெனத் தரையிறங்கியுள்ளது.

130 பயணிகளுடன் நேற்று புறப்பட்டுச் சென்ற விமானம் ஒரு மணி 32 நிமிடத்திற்குப் பின்னர் விமானத்தின் வலது பக்க இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அவசரமாகத் தரையிறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [வ

## சிற்றி ஒவ் றிங்கோ இன்று புறப்படும்

(யாழ்ப்பாணம்)

''சிற்றி ஒவ் றிங்கோ'' பயணிகள் கப்பல் இன்று 400 பயணிகளுடன் காங்கேசன் துறையிலிருந்துதிருமலைக்குப் புறப்படும்.

இக்கப்பலில் பயணம் செய்ய அனுமதி மற்றும் பயணச்சீட்டு பெற்றவர்கள், இன்று காலை 7.00மணிக்கு, யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள மணியங் கட்டிடத்தில் இயங்கும் ரான் அலுவலகத்திற்கு வருமாறு ரான் அதிகாரி எஸ் குகராஜன் தெரிவித்துள்ளார். (இ)

## புலிகளின் நான்கு படகு அழிக்கப்பட்டதாம்

(கொழும்பு)

பருத்தித்துறைக்கு வடகிழக்கு கடற்பகுதியில் நேற்று முன்தினம்மாலை கடற்படை படகுகளுக்கு பாதுகாப்பு வழங்கச்சென்ற ரோந்துப் படகு விடுதலைப்புலிகளின் படகுஇரண்டைஅவதானித்து அதனைத்தாக்கி அழித்ததாகவும் மற்றும்இருஅதிவேக படகுகளையும் தாக்கிஅழித்ததாகவும் இதில் பத்திற்கும் மேற்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருக்கலாமெனவும் விசேடஊடகத்தகவல் நிலையம் நேற்றுஅறிவித்துள்ளது (இ)

## மூன்று ஆயர்கள் ஜனாதிபதியை சந்திப்பர்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவை சர்வமதக் குழுவில் அங்கம் வகித்த மூன்று ஆயர்கள் சந்தித்துப்பேசவுள்ளனர்.

இச்சந்திப்பு எதிர்வரும் 28ஆம்திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான நல்லெண்ணத்தை அரசு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று ஜனாதிபதியைக் கோருவதுடன், சமாதான முயற்சிகள் குறித்து கலந்துரையாடலில்

→8-ம் பக்கம் பார்க்க

## யாழ். மாநகரசபையில் ஆறு பரிசாரகர்கள் வேலை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் சுகாதாரப்பிரிவில் கடமை ஆற்றிய ஆறு பெண் பரிசாரகர்களை ஆணையாளர் இராசா தணிகாசலம் வேலை நீக்கம் செய்துள்ளார்.

கடந்த ஆறு ஏழு வருடங்களாக யுத்த நெருக்கடிக்குள்ளும் தற்காலிகமாக பதவியில் இருந்து ஆற்றிய சேவையையும் மறந்து தேவை ஏற்படும்போது அழைப்பதாகக்கூறி வேலை இடைநிறுத்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக அவ்வூழியர்கள் கண் கலங்கத் தெரிவித்தனர்.

இது குறித்து யாழ் மாநகர சபை தொழிற்சங்கப் பிரதி

→ 8ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் யுத்த நிறுத்தத்தை கனடா வரவேற்கிறது!

(கொழும்பு)

பத்துத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் நேற்று கனடாத் தூதுவரைச் சந்தித்து இனப்பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர்.

இக் கலந்துரையாடலை அடுத்து கனடாத் தூதுவர் கருத்துத் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை கனடா வரவேற்கிற அதேவேளை, முன்யோசனை எதுவுமின்றி இலங்கைஅரசு யுத்தநிறுத்தம் செய்யுமெனநாம்எதிர்பார்க்க முடியாது என்றார்.

இலங்கையில் சமாதானம் ஏற்பட சர்வதேச சமூகம் எடுக்கும் முயற்சிகளை கனடா ஆதரிக்குமென்றும் கனடாத் தூதுவர் தெரிவித்துள்ளார். வ)

நாளை---
**யாழ். மாநகரசபையின்**
புதிய ஆணையாளர்
புதிய மேயர்
**சுகாதாரப்பகுதியைப் பழிவாங்குவது ஏன்?**
விபரம் நாளைய
வலம்புரியின்
குருஷேத்திரத்தில்
(ஆ-ர்)

## புலிகளின் யுத்தநிறுத்தத்தை அரசு உதாசீனம் செய்வது நல்லதல்ல

### வலம்புரிக்கு வஜ்ஜிரதேரர் பிரத்தியேக பேட்டி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கான நல்லெண்ணத்தைத் தொடர்ந்தும் காட்டிவருகின்றனர். இரண்டு மாதகால யுத்த நிறுத்தத்தை அவர்கள் அறிவித்திருந்த போதும், அரசாங்கம் எந்தவிதமான ஆக்கபூர்வமான பதிலையும் அளிக்காது புலிகளைத் தடை செய்ய வேண்டுமென கோரி வருகிறது. அரசின் இத்தகைய போக்கு பாதகமான விளைவையே தரும்.

இவ்வாறு கும்புறுகமுகே வஜ்ஜிரதேரர் எமது கொழும்புச்செய்தியாளருக்கு அளித்த பிரத்தியேக பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் வஜ்ஜிர தேரர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக இரண்டு தடவைகள் விடுத்த யுத்த நிறுத்த அறிவிப்புக்கு அரசு சாதகமான பதிலை யுத்த நிறுத்தம் முடிவடைவதற்கு

→ 8-ம் பக்கம் பார்க்க

# பெண்ணின் மரணத்தில் மர்மம்
# மேல் விசாரணைக்கு உத்தரவு

(வவுனியா)

வவுனியாவில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்ட யுவதி சைனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் குறித்து வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் மேல்விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை வன்னியிலிருந்து பிரமணாலங்குளம் இராணுவ சோதனைச்சாவடி ஊடாக வவுனியா வந்திருந்த ஜயந்தி வீரசிங்கம் (வயது-25) என்ற இந்த யுவதியின் மரணத்தில் சந்தேகம் எழுந்துள்ளது.

இதனையடுத்தேமரணவிசாரணையை மேற் கொண்ட நீதிபதி மேல் விசாரணைக்கான உத்தரவை வவுனியா பொலிஸாருக்கு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, பிரமணாலங்குளம் இராணுவ சோதனைச் சாவடிப் பொறுப்பதிகாரி, உட்பட 3 இராணுவ வீரர்களையும் உடனடியாக ஆஜர் செய்யுமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார் (ந)

## ஞானச்சுடர் இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் மாதாந்தம் வெளியிடப்படும் ஞானச்சுடர் மாத வெளியீடு மாசி மாத இதழ் நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

வெளியீட்டுரையை இந்துப் பேரவை செயலாளர் சி. சக்திகிரீவனும், மதிப்புரையை இளைப்பாறிய அதிபர் சு. செல்லத்துரையும் நிகழ்த்தவுள்ளனர். (செ)

## மெய்வன்மை போட்டி

(மந்துவில்)

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு வலயமட்ட மெய்வன்மைப் போட்டி விரைவில் இடம்பெறவுள்ளது.

இதற்கு முன்னோடியாக போட்டியில் பங்குபற்றுவதற்கான மாணவர்களை தெரிவு செய்து மார்ச் மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னர் அவர்களுடைய பெயர் விபரங்களை வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-39)

## பிரித்தானிய அரசின் நிலைப்பாட்டிற்கு தமிழ்க் கட்சிகள் ஆதரவு

(கொழும்பு)

பிரித்தானிய அரசு பயங்கரவாதப் பட்டியலில் இடம் பெற்றுள்ள அமைப்புக்களை வெளியிடாதது குறித்து கொழும்பில் தமிழ்க் கட்சிகள் வரவேற்றுள்ளன.

பிரித்தானிய அரசின் இத்தகைய செயற்பாடுகள் தொடர்பாகஅகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உபதலைவர் கருத்துத் தெரிவிக்கையில் பிரித்தானிய அரசு பயங்கரவாத அமைப்புக்கள் இடம் பெற்றுள்ள பட்டியலைத்தற்போது வெளியிடமாட்டாது. தொடர்ந்தும் இரண்டுஆறு மாதங்களாகிய பின்பே அது அப்பட்டியலை வெளியிடக்கூடும். பெரும்பாலும் அப்பட்டியலில் தமிழர்உரிமைக்காகப் போராடும் விடுதலைப் புலிகளின் பெயர் இல்லாமல் போகலாம். இந்த நிலையில், வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் பதவி விலக வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். (ம)

## வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர்தொழில்நுட்ப கல்விநிறுவகபுதுமுகமாணவர்களிற்கான வரவேற்பு நிகழ்வு கடந்த 15 ஆம் திகதி நிறுவன மண்டபத்தில்நடைபெற்றது. (உ-104)

## நன்றி தெரிவிப்பு

அண்மைய யுத்த நடவடிக்கைகள் காரணமாக மூடப்பட்டிருந்த பதினொரு வடமராட்சி கிழக்கு பாடசாலைகளும் மீள திறப்பதற்கேற்ற முற்சியை மேற் கொண்டமைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நன்றி தெரிவித்து வடமராட்சி கிழக்கு இடம் பெயர்ந்தோர் நலன் புரிச்சங்கம் கடிதம் எழுதியுள்ளது. (உ)

## தீவகத்திற்கு பாடநூல் விநியோகம் விரைவில்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கு எடுத்து வரப்பட்ட பாடநூல்களில் யாழ்ப்பாணம், வலிகாமம் வடமராட்சி ஆகிய கல்வி வலயங்களுக்கு விநியோகிக்கப்பட்டு விட்டதாகவும் தீவக வலயத்திற்கு இன்னும் ஒருசில தினங்களில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் விடயமறிந்த வட்டாரங்களில் இருந்து அறிய முடிகிறது.

நிலவும் போக்குவரத்துச் சிரமங்கள் காரணமாகவே தீவகத்திற்கான பாடநூல் விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-12)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

பெப் மாதம்18 – ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேசசெயலக ரீதியாகத் தரப்படுகின்றன:

### சங்கானை

| | |
|---|---|
| 178656 ஏ | 179389 ஏ |
| 182583 ஏ | 182583 பி |
| 182583 சி | 182671 ஏ |
| 182671 பி | 182671 சி |
| 182712 ஏ | 182759 ஏ |
| 182791 ஏ | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 173814 ஏ | 173814 பி |
| 173814 சி | 175368 ஏ |
| 175368 பி | 175368 சி |
| 178225 ஏ | 178419 ஏ |
| 180108 ஏ | 180108 பி |
| 180108 சி | 180236 ஏ |
| 180236 பி | 181726 ஏ |
| 181792 ஏ | 181806 ஏ |
| 181949 ஏ | 181949 பி |
| 181951 ஏ | 181995 ஏ |
| 181995 பி | 181995 சி |
| 181995 டி | 182120 ஏ |
| 182127 ஏ | 182127 பி |
| 182127 சி | 182181 ஏ |
| 184343 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 173755 ஏ | 173755 பி |
| 180239 ஏ | 181721 ஏ |
| 181721 பி | 181961 ஏ |
| 182006 ஏ | 182187 ஏ |
| 182187 பி | 182187 சி |
| 191798 ஏ | 191798 பி |
| 179331 ஏ | 179363 பி |
| 182643 ஏ | 182642 பி |
| 182643 சி | 182752 ஏ |
| 182752 பி | 182832 ஏ |
| 182832 பி | 182832 சி |
| 183091 ஏ | 183091 பி |
| 183091 சி | 183125 ஏ |
| 183153 ஏ | 183153 சி |
| 183161 ஏ | 183207 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 176649 ஏ | 178658 ஏ |
| 178658 பி | 179007 ஏ |
| 179007 பி | 179008 ஏ |
| 179091 ஏ | 179091 பி |
| 181480 ஏ | 181480 பி |
| 181537 ஏ | 181537 பி |
| 183068 ஏ | 183081 ஏ |
| 183036 ஏ | 183142 ஏ |
| 183178 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 172736 ஏ | 181683 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 173167 ஏ | 173167 பி |
| 173167 சி | 178845 ஏ |
| 178845 பி | 179200 ஏ |
| 179484 ஏ | 179484 பி |
| 182824 ஏ | 182825 ஏ |
| 182825 பி | 183063 ஏ |
| 183063 பி | 183067 ஏ |
| 183067 பி | 183067 சி |
| 183144 ஏ | 188319 ஏ |

பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன:

### சங்கானை

| | |
|---|---|
| 179212 ஏ | 179212 பி |
| 181622 ஏ | 181622 பி |
| 181622 சி | 181659 ஏ |
| 181659 பி | 181660 ஏ |
| 181660 பி | 181681 ஏ |
| 182743 ஏ | 189165 ஏ |
| 189165 பி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 173068 ஏ | 173068 பி |
| 179335 ஏ | 179335 பி |
| 179335 சி | 179335 டி |
| 179335 ஈ | 179335 எவ் |
| 181521 ஏ | 181521 பி |
| 182687 ஏ | 182699 ஏ |
| 182758 ஏ | 182758 பி |
| 181758 சி | 182773 ஏ |
| 183862 ஏ | 184032 ஏ |
| 183032 பி | 183032 சி |
| 183032 டி | 183050 ஏ |
| 183050 பி | 183123 ஏ |
| 183256 ஏ | 183281 ஏ |
| 183281 பி | 183281 சி |
| 183281 டி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 183139 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 178767 ஏ | 178972 ஏ |
| 179299 ஏ | 179299 பி |
| 179299 சி | 181603 ஏ |
| 181603 பி | 181635 ஏ |
| 181635 பி | 181645 ஏ |
| 182578 ஏ | 182579 ஏ |
| 182827 ஏ | 181085 ஏ |
| 183099 ஏ | 183099 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 178646 ஏ | 178646 பி |
| 178646 சி | 178923 ஏ |
| 182994 ஏ | 182594 பி |
| 182594 சி | 182754 ஏ |
| 182830 ஏ | 182830 பி |
| 182830 சி | 183172 ஏ |
| 183172 பி | 183289 ஏ |
| 183289 பி | |

## வடிகால் அமைப்பு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபையினால் திருநெல்வேலி பலாலி வீதியில் பொதுச் சந்தையை அண்மித்த பகுதியில் நடைபாதை வடிகால் என்பன விரைவில் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நிதியை வீதி அபிவிருத்திஅதிகார சபைக்கு நல்லூர் பிரதேச சபை வழங்கியுள்ளது (உ-103)

## ஆஸி. இல் ஒலிபரப்பாகும் பண்ணிசை

(நல்லூர்)

யாழ் நல்லூர் திருநெறிய தமிழிசை வெளியீட்டுக் கழகத்தினர் வெளியிட்டுள்ள 'திருமுறைத் தேனமுது' ஒலிப்பேழையின் 'தேவாரப் பண்ணிசை' அவுஸ்திரேலியாவில் தமிழ் ஒலிபரப்பில் ஒலிபரப்பப்பட்டு வருகிறது. (உ-103)

## லொறி குடை சாய்ந்தது

(கொழும்பு)

பள்ளேகமயிலிருந்து மாத்தளைக்கு மாடுகளை ஏற்றிச் சென்ற லொறியொன்று அண்மையில் மெதவந்தப்பகுதியில் குடை சாய்ந்ததில் லொறிச் சாரதி ஸ்தலத்திலேயே பலியானதுடன் லொறியிலிருந்த 12 மாடுகளும் இறந்துள்ளன. (உ)

## தேவாலயம் புனரமைப்பு

(கல்வயல்)

கரவெட்டியிலுள்ள பழமை சிறப்பு மிக்க புனித அந்தோனியார் ஆலயம் பங்குத் தந்தை அருட்திரு எம். யேசுரட்ணம் எடுத்த முயற்சியின் பேரில் புனரமைக்கப்பட்டுள்ளது. (உ-111)

## இயங்காத பாடசாலை

(கல்வயல்)

அச்சுவேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை நீண்டகாலமாக இயங்காதிருக்கிறது.

கடந்த போர் நடவடிக்கைகளையடுத்து பாடசாலைக் கட்டடம் சேதமுற்ற காரணத்தினால், இப்பாடசாலை இயங்க முடியாமல் உள்ளது. (உ-111)

## வதிரி டயமன்ஸ் வி.க. வெற்றிவாகை சூடியது

(கரணவாய்)

அல்வாய்நண்பர்கள் விளையாட்டுக்கழகம்பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கழகமைதானத்தில்கழகத் தலைவர் க. இரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது

இப் போட்டியின் இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் அதனை எதிர்த்து விளையாடிய வல்லை ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை 5 : 3 என்ற கோல் கணக்கில் வென்றுசம்பியன் கிண்ணத்தைதனதாக்கிக்கொண்டது.

இப் போட்டியின் மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழகம் அதனை எதிர்த்து விளையாடிய அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக்கழகத்தை 1:0 என்றகோல்கணக்கில் வெற்றி கொண்டது.

இப்போட்டிகளின் தொடர் ஆட்ட நாயகனாக தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ் கிருபாகரன் தெரிவுசெய்யப்பட்டார் (உ-27

## கால்கோள் விழா

(நல்லூர்)

யாழ். இந்துமகளிர் ஆரம்ப பாடசாலையில், தரம் ஒன்றின் கால்கோள்விழா, அண்மையில், அதிபர் திருமதி த. துரைசிங்கத்தின் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. (உ-103)

## இறுதிப் போட்டி

(கரணவாய்)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர்பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களிற்கிடையான கரபந்தாட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் இறுதியாட்டம்அண்மையில் குடத்தனை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. (உ-27)


## வாழ்த்துவதிற் பெருமிதமடைகின்றோம்

வனப்பாலும், வளத்தாலும் சற்றுப்பின்தங்கியுள்ள நாயன்மார் கட்டுக் கிராமத்தின் சிறார்களின் கல்வி மேம்பாட்டில் அக்கறைகொண்டு உழைத்த பெருமக்களில் குறிப்பிடத்தக்கவர் திரு திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள். பேராசன்சொக்கன் மணிவிழாஞாபகார்த்த வைப்பு நிதியில் இருந்து வருடந்தோறும் சிறந்த பெறுபேற்றைப் பெறும் யாழ்/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை மாணவர்கட்குப் புலமைப்பரிசில் கிடைக்க வழி வகுத்தவர். எமது சனசமூக நிலையம் புலமைப்பரிசில் நிதியம் ஆரம்பித்தபோது அத்திட்டம் வெற்றிபெறப் பெரிதும் உழைத்தவர். எம் மண்ணோடும், மக்களோடும் இணைந்து நின்று பணியாற்றுவது மட்டுமின்றி யாழ்/தேசியகல்வியற் கல்லூரியின் பீடாதிபதிப் பதவியையும் அலங்கரிக்கும் எம் ஆசான்

''கல்வியியற் கலாநிதி''

யானதையிட்டு மகிழ்வதோடுஇன்னும் பல பதவிகள் அவரை வந்தணைந்து பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

யாழ்/ நாயன்மார்க்கட்டு
சனசமூக நிலையப் புலமைப்
பரிசில் நிதியம்.

(கி/ 1510)

# செய்தித் துளிகள்

## சினைப்பர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வெலிஓயா ஆரிய கொண்டான் குளப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில், இரண்டு விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளதாக ஊடகத் தகவல் மையம்அறிவித்துள்ளது.

(உ-9)

## தொடர்பு கொள்க

[யாழ்ப்பாணம்]

கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

திருமதி வீரசிங்கம் பரமேஸ்வரி இடைக்குறிச்சி (ஸ்ரீ. சுப்பிரமணியம் பாடசாலை அருகில்) வரணி.

திரு பற்றிக் கருணாகரன் கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(உ)

## அன்னதானம்

[யாழ்ப்பாணம்]

மகா சிவராத்திரியை முன்னிட்டு, நல்லூர் ஆறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில், இன்று பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கலும் இடம் பெறவுள்ளது.

[உ]

## விபத்தில் காயம்

(கந்தர்மடம்)

மோட்டார் சைக்கிளுடன் மோதுண்ட மீன்வியாபாரி ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஓட்டுமடம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றஇச்சம்பவத்தில் கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த செபஸ்ரியான் [வயது46] என்பவரே காயமடைந்தவராவார்.

[உ-37]

## அனுமதிப் பத்திரம்

(கல்வயல்)

கைதடிப் பகுதியில் அண்மையில் மீளக்குடியேற்றப்பட்ட பொதுமக்கள் வெளியிடங்களுக்குச் சென்றுவர படையினரால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளியிடங்களைச் சேர்ந்தோர் கைதடி சென்றுவர அனுமதி வழங்கப்படவில்லை. (உ-111)

## பண்ணிசை போட்டி

(நல்லூர்)

யாழ். மாநகராட்சி மன்றச் சைவசமய விவகாரக் குழு, கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன், யாழ். மாவட்டப்பாடசாலை மாணவ-மாணவியருக்கிடையே கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளில், 2001 ஆம் ஆண்டுக்கான பண்ணிசைப் போட்டியினை விரைவில் நடத்துவதற்கான ஒழுங்கினை மேற்கொண்டுள்ளது. (உ-103)

## விளக்கமறியல்

[யாழ்ப்பாணம்]

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களான இராஜமனோகரன் கிருபாகரன், சச்சிதானந்தன் சுதன். கந்தசாமி விமலசேனாதிராஜா ஆகிய மூவரையும் மார்ச் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

[உ-12]

## நீதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கொட்டடிப்பகுதியில் இடம்பெற்ற களவுச் சம்பவங்களுக்கு தொடர்புடைபட்டதாக சந்தேகிக்கப்படும் இந்திரராஜா தினேஷ்குமார் (வயது 14), நாகநாதன் பார்த்தீபன் (வயது 14) ஆகிய இருவரையும் மார்ச் மாதம் 5 ஆம் திகதிவரை கானான் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் வைக்குமாறு யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

(உ-12)

## பொருட்களின் விலை குறையுமா?

(செம்பியன்பற்று)

இலங்கையில் ஏற்பட்டபணவீக்க நிலைகாரணமாக ஒரு டொலரின் பெறுமதி 80 ரூபாவில் இருந்து 103 ரூபாவரை அதிகரித்தது. இதனால் யாழ். குடாநாட்டில் பொருட்களின் விலை பெருமளவால் அதிகரித்தது.

ஆனால் டொலரின் பெறுமானம் தற்பொழுது 90ரூபா வரை வீழ்ச்சி அடைந்த போதும் பொருட்களின் விலையில் பெரிதாக எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

(உ-42)

## பொருட்கள் மீட்பு

(மந்துவில்)

நுணாவில் கிழக்கு கல்வயல் பகுதிமக்கள் படையினரின் அனுமதியுடன் கடந்த செவ்வாயன்று தமது வீடுகளுக்குச் சென்று, விட்டுவந்த பொருட்களை மீட்டுவந்தனர்.

(உ-39)

## இறுதியாட்டம்

[கரணவாய்]

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களிற்கிடையிலான எல்லே சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் க. முகுந்தன் தலைமையில் நடைபெற்றது.

[உ-27]

## கல்விச் சுற்றுலா

(சங்கானை)

சித்தன் கேணி சுப்றா கல்வி நிலையத்தினரால் நேற்று புதன் கிழமை கல்விச்சுற்றுலா ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி கல்வி நிலையத்தில் கற்கும் அனைத்து மாணவர்களும் இச் சுற்றுலாவில் பங்கு கொண்டு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களையும் புகழ் மிக்க இடங்களையும் தரிசித்து வந்துள்ளனர்.

(உ-124)

## விடுதலை

[யாழ்ப்பாணம்]

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்கைது செய்யப்பட்டிருந்த செல்வராசா நகுலேஸ்வரன் என்பவரை சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்குக்கிணங்க யாழ். நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

[உ-12]

## சிலைகள் புதுப்பொலிவு

(சங்கானை)

யாழ். நகரில் அமைக்கப்பட்டிருக்கும் பெரியார்களின் சிலைகள் செப்பனிடப்பட்டுப் புதுப்பொலிவுடன்காணப்படுகின்றன.

திருவள்ளுவர், ஔவையார் சிலைகள்இவற்றில் அடங்கும்.

(உ-124)

# விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம்

# அரச படைகள் முன்னேற முயற்சி

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம் செய்திருந்தும்படை நகர்வுகளை வலிந்துநடத்திய இராணுவம் சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டமை குறித்து

## முரண்பட்டநிலை குறித்து யாழ் ஆயர் அதிருப்தி

யாழ். ஆயர்வண தோமஸ் சவுந்தரநாயகம் இலங்கை இராணுவத்தளபதி லயனல் பலகல்லவிடம்அதிருப்தி தெரிவித்துள்ளார்.

வன்னி சென்று திரும்பியுள்ள யாழ். ஆயர் கொழும்பில் இராணுவத்தளபதியை சந்தித்த போது,

வன்னிக்கான பொருளாதாரத் தடை குறித்தும் ஆயர் பலகல்லவிடம் கவலை தெரிவித்துள்ளதுடன்,

தடைக்கு உட்படாத பொருட்களான குழந்தைகளுக்குரிய மருந்துப் பொருட்கள் துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்களையாவது தடையின்றி தாராளமாக அங்கு அனுப்புமாறும் ஆயர் கேட்டுள்ளார்.

அத்துடன், அத்துமீறல் நடவடிக்கைகளைத் தவிர்த்து சமாதான முனைப்பைக் காண்பிக்குமாறும் பலகல்லவிடம் வலியுறுத்தியிருப்பதாக தெரியவந்துள்ளது.

(உ-5)

## இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை இளைஞர் ஒருவரை 512வது படைப்பிரிவினர் கைது செய்திருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

தேவதாஷன் சுகேந்திரன் [வயது 21] என்ற இளைஞரே கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இவரைக்கைதுசெய்யப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு வழங்கப் பட்டிருப்பதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-12)

## இராசி பலன்

22-02-2001

(மாசி 10, வியாழன்)

சதுர்த்தசி ந ப 12 10 வரை

அவிட்டம் பி.இ 5.40 வரை

ராகுகாலம் 2 01- 3.31

சுபநேரம் 8.01- 9 31

அமாவாசை விரதம்.

**மேடம்**

சென்ற இடம் சிறப்பு, அதிகாரம், புகழடைதல், தனவரவு.

**இடபம்**

தொழில் விருத்தி, கட்டுப்பாடு, முயற்சி கைகூடும், மேன்மை.

**மிதுனம்**

பிரயாணம், உடல்வியாதி, முயற்சி தாமதம், போசன சுகம்.

**கடகம்**

தனவரவு, உற்சாகம், நண்பர்கள் உறவு, திடீர் மனஸ்தாபம்.

**சிங்கம்**

நினைத்த காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, தனவரவு, விருந்துபசாரம்.

**கன்னி**

கவலை தீருதல், முயற்சி தாமதம், நோய் குணமடைதல், பிரயாணம்.

**துலாம்**

மதிப்புக் குறைவு, பயந்த சுபாவம், காரிய தாமதம், திடீர் நன்மை.

**விருச்சிகம்**

முயற்சி கைகூடும், புதிய செய்தி, பிரயாணம், மனச்சஞ்சலம்.

**தனுசு**

தனவரவு, முயற்சி பலிதம், அரச நன்மை, மனப்பதற்றம்.

**மகரம்**

காரிய தாமதம், பணச் செலவு, தெய்வ சிந்தை, கௌரவக் குறைவு.

**கும்பம்**

சயன சுகம், அலைச்சல் குறைதல், முயற்சி பலனளிக்கும், ஜனவசியம்.

**மீனம்**

பிரயாணம், பணவிரயம், காரிய தாமதம், நித்திரைக் குறைவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## வாய்க்கால் சிதைவு மக்கள் அவலம்

(கந்தர்மடம்)

அரசடி வீதியும், பழம் வீதியும் சந்திக்கும் திருப்பத்திலுள்ள மழைநீர் வாய்க்கால் தகர்ந்து அதன் அகலம் அதிகரித்துள்ளதனால், இவ் வீதியால் இரவு வேளையில் பயணஞ் செய்வோர் இவ்வாய்க்காலினுள் விழுந்தெழும்பிச் செல்கின்றனர்.

இரவு வேளையில் தினமும் இச்சம்பவம் இடம்பெறுகின்றமையால் சம்பந்தப்பட்டவர்கள் இது குறித்து கவனம் செலுத்த வேண்டும் என பொதுமக்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது

(செ-37)

## சமுர்த்தி வலயம் திறந்து வைப்பு

(துன்னாலை)

வடமராட்சி வடக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்காக சமுர்த்தி வலயம் 1 கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது

(செ- 41)

## விஷமிகளின் செயலால் குடிநீர் பெறுவதில் சிரமம்

(துன்னாலை)

நெல்லியடி கரவெட்டிப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளகுடிநீர்க் குழாய் சில விஷமிகளினால் தூணுடன் சேர்த்துப் புரட்டப்பட்டுள்ளமையால் இப்பகுதி மக்கள் குடிநீர் பெற்றுக்கொள்வதில் சிரமப்படுகின்றனர்.

தேசிய நீர் வடிகால் சபையின் நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் ஜேர்மன் ஜீ.ரி.சற் நிறுவனமும் இணைந்து இக்குழாயினை அமைத்திருந்தது.

இக் குழாய் மூலமே கரவெட்டிப் பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது.

தற்போது இக் குழாயினை சேதப்படுத்தியுள்ளமையினால் இப்பகுதி மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பெருஞ் சிரமத்தினை எதிர்நோக்குகிறார்கள். (செ-41)

## முல்லைக் கடலில் கடற்படை தாக்குதல்

(வவுனியா)

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தம் செய்துள்ள நிலையில்முல்லைத்தீவு கடற்பிரதேசத்தில் ஆறாவது தடவையாகவும் கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பீரங்கித் தாக்குதலில் மீனவர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் படகு ஒன்றும் எரிந்து நாசமாகியது.

முல்லை. வண்ணாங்குளத்தைச்சேர்ந்த மூ. ஆசிர்வாதம் (வயது35) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இதன் போது மூன்று மீனவர் உயிர் தப்பி கரை சேர்ந்துள்ளனர்.

(உ-5)

## வெற்றிலைச் செடிகளில் நோய்த்தாக்கம்

(சங்கானை)

இளவாலை விளான் பகுதி வெற்றிலைச் செடிகளில் ஒருவகை புள்ளிநோய் பரவி வருகிறது.

இதனால் வெற்றிலைக் கொழுந்துகள் நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியிருப்பதாகவும்.

நோய்த்தாக்கத்தை கட்டுப்படுத்த மருந்துகள் எவையும் நடைமுறையில் இல்லையெனவும் விவசாயிகளால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நோய்த்தாக்கத்தை கட்டுப்படுத்தா விட்டால் எதிர்காலத்தில் வெற்றிலைக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவும் நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-123]

## மர்மப் பொருள் வெடித்து இளைஞர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கன்னங்குடாப் பகுதியில் அநாதரவாகக் கிடந்த பொருள் ஒன்று வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்,

கன்னங்குடா காயமடுவைச் சேர்ந்த பா. முருகமூர்த்தி என்பவரே படுகாயமடைந்தவராவர்.

பென்சில் போன்ற அமைப்பில் கிடந்த பொருளை எடுத்து அதன் அடிப் பகுதியைதேய்த்தவேளையே அது வெடித்ததாக அந்த இளைஞன் தெரிவித்துள்ளார்.

(உ-05)

# செய்தித் துளிகள்

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய புதிய கட்டடத்திறப்பு விழா எதிர் வரும் 25ம்திகதி நடைபெறவுள்ளது.

கி.தங்கவடிவேல் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் வலிகிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் பிரதம விருந்தினராகவும் விசேட விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், வலிகிழக்கு பிரதேச சபையின் உபதலைவர் யு.எல்.ஏ.ரவி ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

நீண்ட காலமாக சேதமடைந்துள்ள இருபாலை கிழக்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஜனாதிபதியிடம் இருந்து பெறப்பட்ட விசேட மூலதன நிதியில் இருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய்ப் பிரதேச சபைத்தலைவர் பூ.குணசிங்கம் தெரிவித்துள்ளார்:

(உ)

## பிணையில் விடுதலை

[கொழும்பு]

கசகஸ்தானில் இருந்து இலங்கைக்குதிருப்பி அனுப்பி வைக்கப்பட்ட 23பேரும் நீர் கொழும்பு நீதவான் முன்னிலையில்ஆஜர்செய்யப்பட்டு தலா 50ஆயிரம்ரூபா சரீரப் பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்டவர்களில் 22பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்: மற்றவர்கள்முஸ்லிம்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வ

## நாடகப் பயிலகம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் திருமறை கலாமன்றத்தின்ஏழாவதுநாடகப்பயிலகம் கடந்த ஞாயிறு, திங்கள் தினங்களில் சிறப்பாக இடம்பெற்று நிறைவெய்தியது.

இதில்நாடகம்பற்றிய விளக்கங்களும்செயல் முறைரீதியான பயிற்சிகளும் சிறப்புத்தேர்ச்சியுள்ள நாடக கலைஞர்களால் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில்பல்வேறுநாடகதுறை சார் ந்தோரும் பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டு பெரும்பயனைப்பெற்றனர். (உ-59)

## வீதி திருத்தம் இல்லை

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேசசபையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள உடுவில் மேற்கு இலந்தையடிச் சந்தியில் இருந்து டச்சு றோட்டிற்குச் செல்லும் வீதி கடந்தபல வருடங்களாக திருத்தப்படாமல் உள்ளது. (உ-104)

## பாதிப்புற்ற மக்களுக்கு உதவி

[ஈச்சமோட்டை]

சமூக மட்டத்தில் பல்வேறு நிலைகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்யும் நோக்குடன் ‘சண்’ [SUN] எனும் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் தனது முதற்கட்ட பணியாகபோர்அனர்த்தங்களால் ஊனமுற்றவர்களின் குடும்பங்களின் சுயதொழில் வாய்ப்பை ஊக்குவிக்க கடன் உதவி வழங்கும் திட்டமொன்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது: (உ-59)

## ஆசிரிய மாணவர் அவதி

(செம்பியன்பற்று)

பலாலி ஆசிரியர் கலாசாலையில் இதுவரை காலமும் இயங்கி வந்த தேநீர் சாலை மூடப்பட்டதனால் ஆசிரிய மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

இதுவரைகாலமும் நல்லூர் ப.நோ.கூ. சங்கம் இவ்வசதியை செய்து வந்தது. அது அச்சேவை வழங்குவதை நிறுத்தியமையால் ஆசிரிய மாணவர்கள் தேநீர் அருந்துவதற்காக பெரும் சிரமப்படுவதோடு கலாசாலைக்கு வெளியே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

(உ-42)

## ஒஸ்ரியாவில் மாநாடு

(கொழும்பு)

தென் ஆசியாவின்இன்றைய நிலை பற்றி ஆராய்வதற்கு ஒஸ்ரியாவில் இன்று மாநாடு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து ஐ.தே.க. பிரதித்தலைவர் கரு ஜெயசூரியாவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் ஆனந்த சங்கரியும் நேற்று ஒஸ்ரியா பயணமாகியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-9)

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அரச பொது சேவை தொழிலாளர் சங்கத்தின் கல்விப் பிரிவின் விசேட கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு யா/ வண்ணார் பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருப்பதாக அதன்செயலாளர் தெரிவித்துள்ளார் (உ)

## வீதிஒழுங்கு விழிப்பு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை அடுத்து பாடசாலை ரீதியாக வீதிஒழுங்குகள் சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்குகளை யாழ் மாவட்ட மக்கள் நலன்புரிச்சங்கத்தினர் மேற் கொண்டுவருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக மேற்படி சங்கத்தினால்தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

(உ-15)

## பண்ணிசை பஜனை

(நல்லூர்)

ஒவ்வொருவாரமும், செவ்வாய் வெள்ளி ஆகிய தினங்களில், இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயத்தில் திருமுறைப் பண்ணிசைப் பஜனை நடத்தப்பட்டுவருகிறது. மா: இராசரத்தினம் ஆசிரியர் இதனை நடத்திவருகின்றார்;

(உ-103)

## தபால் பெட்டி இல்லை

(வடமராட்சி கிழக்கு)

மணற்காட்டுப் பகுதியில் தபால்களை இடுவதற்கு தேவையான தபால்பெட்டி இன்மையால் அப்பகுதி மக்கள் தபால்கள் அனுப்புவதில் பெரும் சிரமங்களைஎதிர் நோக்கி வருகின்றனர்.

[உ-43]

### கல்வியியற் கல்லூரிக்காய்

# தன்னையே அர்ப்பணித்திருக்கும் பீடாதிபதி ஒரு சமூக முன்னோடி

## பாராட்டு விழாவில் உப பீடாதிபதி உரை

(அச்சுவேலி)

எத்தனையோ துன்பதுயரங்களுக்கு மத்தியிலும் தளராத மன உறுதியுடன் வீறுநடை போட்டு கட்டுக்கோப்புடன் ஆசிரிய மாணவர்களைப் பயிற்றுவித்து வரும் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தன்னையே அர்ப்பணித்து வரும் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன்நமது சமூகத்திற்கு ஓர் முன்னோடி மனிதர்.

கடந்த 18ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிக்கு மேற்படி கல்லூரியில்; அதன்பீடாதிபதி தி கமலநாதன் அவர்களுக்கு யாழ். பல்கலைக்கழகத்தினால் கலாநிதி பட்டம் வழங்கப்பட்டதையிட்டு நடத்தப்பட்ட பாராட்டுவைபவத்தில் சிறப்புரை ஆற்றிய அக்கல்லூரியின் உபபீடாதிபதி பா.தனபாலன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்; தனது ஓராண்டு பூர்த்தியை யாழ். கல்வியியற் கல்லூரி பல்வேறு அசாதாரண சூழல்களுக்கு மத்தியிலும் வெற்றியுடன் நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்றால் அதன் விரிவுரையாளர்களும் பயிற்சி மாணவர்களும் இணைந்து பீடாதிபதிக்குவழங்கும் பேருதவி தான் காரணம் என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா தனது உரையில்,

யாழ்.அன்னையின் மடியில் குழந்தையாக தவழ்ந்து கொண்டிருக்கும் யாழ்.கல்வியியல் கல்லூரி எமது தமிழ்ச் சமூகத்திற்காகதன்சிறப்பான பணியை துடிப்புடன் செய்வதற்கு அதன் பீடாதிபதி ஆற்றிவரும் அர்ப்பணிப்புக்களே காரணம்.இதனை நாம் நன்குணர்ந்து அவரது பணிகளுக்கு மேலும் உரமூட்ட வேண்டும் என்றார்.

மேலும் இக்கல்வியியற் கல்லூரியின் இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதிநாகேந்திராவிக்னேஸ்வரி தனது உரையில்;

யாழ்ப்பாண மண்ணிலே பிறந்து யாழ்.மண்ணிலேயே பட்டம்பெற்று உயர்ந்த கல்விமான்கள் பலர் தமது மண்ணை மதிக்காது வெளிநாடுகளிற்கு வேலை தேடிச் செல்லும் நிலை மாற்றப்பட வேண்டும்.

இவர்கள் மக்களின் துன்பங்களை கருத்திற்கொண்டு எமதுசமூகத்திற்கு உழைப்பதற்காக முன்வர வேண்டும். அப்போது தான் நாம் கல்வியில் அபிவிருத்தியை எட்ட முடியும் என்றார்.

(உ-14)

## உடற்கல்வி ஆசிரியர்க்கு விளையாட்டுப் பயிற்சி

(மந்துவில்)

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த தரம் 6, 7, 8, 9, 10, 11 ஆகியவற்றுக்கு சுகாதாரமும் உடற்கல்வியும் போதிக்கும் ஆசிரியர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

வரும் 24, 25 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களை உணவு தேவையான உடை ,நீர் என்பவற்றை எடுத்து வருமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ: செல்வராசா அறிவித்துள்ளார்.

(உ-39)

## ஆசிரியர் தரக் கணிப்பீடு திட்டம் கைவிடப்பட்டது

### கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் ஆசிரியர்களின் தரக் கணிப்பீடு மேற்கொள்ளும் திட்டத்தை கல்வி அமைச்சு கைவிட்டு விட்டதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் கற்பித்தல், விடுமுறை எடுத்தல், இணைப் பாடவிதான நடவடிக்கைகளில்காட்டும்அக்கறை, ஆகியவற்றின் அடிப்படையிலேயே ஆசிரியர்களின் தரக் கணிப்பீடுஅமையும் என முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

இத்திட்டத்தை நாட்டில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் ஆசிரியர்களும் எதிர்த்ததை அடுத்து இத்திட்டம் கல்வி அமைச்சினால் கைவிடப் பட்டுள்ளது;

(உ-9)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 13 பேருக்கு நட்ட ஈடு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் குவைத் நட்ட ஈட்டை பெற்றுக் கொள்ளாத பின்வரும் 13 பேரை உடன் அப்பணத்தைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பம் செய்யுமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளது.

வி.சின்னத்துரை முருகபதி சுதுமலை தெற்கு,எ. எல்வின் எச்சாட்டி வைரவர் கோவிலடி சுதுமலை தெற்கு,என். புவேந்திரன் மூத்த விநாயகர் கோவிலடி ஆனைக் கோட்டை,என்,ஜெயக்குமார் ஐங்கரன் தெரு சுதுமலை தெற்கு, எஸ். எம். சுரேஸ் குமார் நவாலி மானிப்பாய், அல்பேட் மோகன்ராஜ் நவாலி தெற்கு, ஓ. சிவானந்தன் சுதுமலை தெற்கு, கே. விக்னேஸ்வரி மானிப்பாய் தெற்கு, என். சிவனேஸ்கந்தன் மானிப்பாய் மேற்கு,ஜே. ஓ ஜெயகாந்தி நவாலி தெற்கு, ஜே. ஓ. ஜெயகாந்தா நவாலி தெற்கு,செல்லத்துரை முத்துலிங்கம் நவாலி வடக்கு, க. உமாபுத்திரன் நவாலி வடக்கு.

இவர்களை தத்தமது பகுதி கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ-120)

## வண்ணார்பண்ணையில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(நல்லூர்)

வண்ணை-கன்னாதிட்டி வீதி, சிவன்கோவிலடிப் பகுதியில், சைக்கிள் திருட்டு நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக இப் பகுதிப் பொது மக்களும் வியாபார நிலையத்தினரும் புகார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில், இப்பகுதியில் பூட்டிவைக்கப்பட்டிருந்த புத்தம்புதிய சைக்கிள் ஒன்று திருட்டு ஆசாமிகளால் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

வண்ணை-சிவன்கோவிலடிப் பகுதியில் வியாபார நிலையமொன்றில் வேலை செய்யும் தயரூபன் என்பவருடைய சைக்கிளே திருட்டு ஆசாமிகளின் கைவரிசைக்கு இலக்காகியுள்ளது.

இவரது சைக்கிள்ஒன்று முன்னரும் திருட்டுப்போயுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-103)

## மலிவு விலையில் தேங்காய்

(துன்னாலை)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து, பருத்தித் துறைப் பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு பருத்தித் துறை பிரதேச சபை பொது நூலகத்தில் வைத்து அண்மையில் மலிவு விலையில் தேங்காய்கள் வழங்கப்பட்டன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பேரில் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினூடாக இத்தேங்காய் வழங்கல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது:

(உ-41)

## கொக்குவில்இந்துமயானம் விரைவில் திருத்தியமைப்பு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட,கொக்குவில் இந்து மயானம் விரைவில் திருத்தியமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி மயானப்பகுதியின் வட மேற்கு மூலையில் உள்ள அடர்ந்த செடி, கொடி, பற்றைகளுள், மிதிவெடிகள் இருக்கலாம் என்ற அச்சத்தின் காரணமாகத் துப்புரவு செய்யாத நிலையில் காணப்படுகிறது.

வெகுவிரைவில் இப் பகுதியும் செப்பனிடப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்:

[உ-103]

## இன்று ஒரு தகவல்

# சிவபூஜைக்குச் சாம்பல்

முன்னொரு காலத்தில் பாஞ்சால தேசத்தைச் சிம்மகேது என்ற அரசன் ஆண்டு வந்தான். ஒரு நாள் அவன் வேட்டைக்குப் புறப்பட்ட போது அவனுடன் ஒருவேடனும் வந்தான். வேட்டையும் முரத்தில் அரசனும்வேடனும் மற்றவர்களிடமிருந்து பிரிந்து போய், பாழடைந்த ஒரு சிவன் கோயிலை அடைந்தார்கள். சிவன் கோயிலில் ஒரு அழகான சிவலிங்கம் இருந்தது. அதைக்கண்டதும் வேடனுக்கு ஒரு யோசனை தோன்றியது பூசையில்லாமல் கிடக்கும் இந்த அழகிய லிங்கத்தை நாம் எடுத்து வைத்துக் கொண்டு அதற்குத் தினம் பூசை செய்தால் என்ன என்று எண்ணினான். தன் எண்ணத்தைஅரசனிடம்சொன்ன போது, அரசன் அதற்குச் சம்மதித்தான். 'ஆனால் சிவலிங்கத்திற்குஎப்படிப்பூஜை செய்ய வேண்டும் என்றுஎனக்குத் தெரியாதே' என்றான் வேடன்.

அதற்கு அரசன் நீ தினம் ஸ்நானம் செய்து விட்டுச் சிவலிங்கத்தைச் சுடுகாட்டுச் சாம்பல் கொண்டு அபிஷேகம் செய்ய வேண்டும். சுடுகாட்டுச் சாம்பல் "தான் சிவனுக்கு மிகவும் பிடித்தது. பிறகு சாப்பிடப் போகும் உணவை அவருக்கு நைவேத்தியம் செய்து விட்டுச் சாப்பிட வேண்டும் என்று சொன்னான் அரசன். அன்றையிலிருந்து தினம் சிவலிங்கத்திற்குப் பூஜை செய்ய ஆரம்பித்தான். பூஜை செய்யாமல் அவன் சாப்பிடவேமாட்டான் தான் இல்லாவிட்டாலும்லிங்கத்திற்கு எப்படிப் பூஜை செய்ய வேண்டும் என்றுதன் மனைவிக்குச்சொல்லிக் கொடுத்திருந்தான்.

ஒரு நாள், அவனிடமிருந்த சுடுகாட்டுச் சாப்பல் அத்தனையும் தீர்ந்து விட்டது. முதல் நாள் நல்ல மழை பெய்ததால் சுடுகாட்டில் கொஞ்சங் கூடச் சாம்பல் கிடைக்கவில்லை. 'இன்று நான் பகவானுக்குஎப்படிப்பூஜை செய்யப் போகிறேன்' என்று கவலை தோய்ந்த முகத்துடன் வேடன் இருந்ததைப்பார்த்து அவன் மனைவி' ஒன்று மில்லாத இந்தச் சின்ன விஷயத்திற்கு ஏன் இப்படிக் கவலைப் படுகிறீர்கள்? நீங்கள் ஸ்நானம் செய்து விட்டுத் தயாராக இருங்கள். உங்களுக்குச் சுடுகாட்டுச் சாம்பல் இதோ கிடைக்கிறது பாருங்கள்' என்று சொன்னாள்.

ஒன்றும் புரியாமல் வேடன் ஸ்நானம் செய்ய நதிக்குப் போனான். அப்பொழுது வேடனின் மனைவி குடிசையிலிருந்த சாமான்களையெல்லாம் எடுத்து வெளியே ஒரு மரத்தடியில் வைத்தாள். பிறகு குடிசைக்குத் தீவைத்து விட்டு அந்தத் தீயில் தான் குளிக்கப் போனாள். நதியில் ஸ்நானம் செய்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்த வேடன் இதைப்பார்த்து விட்டு எதற்காகத் தீயில் குதிக்கிறாய் என்று கேட்டான்.

உங்களுக்குப்பூஜை செய்யச் சுடுகாட்டுச் சாம்பல் வேண்டுமே அதற்காகத்தான்! என் சாம்பலைக் கொண்டு உங்கள் பூஜையை முடியுங்கள் என்றாள். 'உனக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா? என்று கேட்டான் கணவன். பைத்தியம் பிடிக்கவில்லை என்றைக்கோ ஒரு நாள் அழியப் போவது இந்த உடல். அது இன்று தான் அழிந்து உங்கள்பூஜைக்காவதுஉதவட்டுமே' என்று சொல்லிக் கொண்டே அந்த உத்தமி தீயில் குதித்துச்சாம்பல் ஆனாள்.

நன்றி
தெய்வீகக் கதைகள்

# பாகிஸ்தானிடம் ஆயுதம் வாங்கும் உடன்பாடு மேற்கொள்ளவில்லை

## இலங்கைத்தூதுவர் மறுப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்குவதற்கான உடன்படிக்கை எதனையும் பாகிஸ்தான் மேற் கொள்ளவில்லை யென இஸ்லாமாபாத்திலுள்ள இலங்கைத் தூதுவர் மறுத்துள்ளார்.

இலங்கையும் பாகிஸ்தானும் ஆயுதக் கொள்வனவு தொடர்பான உடன்படிக்கை ஒன்றினை மேற்கொண்டிருந்தன என வெளியாகிய செய்திகள் தவறானது எனவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் கதிர்காமர் பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது இவ்விடயம் தொடர்பாக எவ்விதமான சந்திபும் இடம் பெறவில்லையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பாகிஸ்தானிய இராணுவ தலைமை அதிகாரிகொழும்பிற்குவிஜயம் மேற்கொண்டிருந்த போதும் இதுபற்றி இராணுவ அதிகாரி எதுவும் கதைக்கவில்லையென்றும் பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார். (செ)

## தொழில்சார் அதிபர்கள் அமைப்பு கவலை

(கொழும்பு)

போர் மற்றும் அதனால் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து தொழில்சார் அதிபர்களின் அமைப்புக்களின் கூட்டமைப்பு பெரும் கவலை வெளியிட்டுள்ளது.

இதன் காரணமாக நாட்டு நிலைமைமிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும்,

தொடரும் போர் அதற்கான செலவு அதன்மூலமான உயிரிழப்பு என்பனவும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வேலையில்லாப் பிரச்சினை குறித்தும் அந்த அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது. (உ-5)

## கடை தீப்பற்றியது

[கொழும்பு]

கிரான்பாஸ் ஆமர் வீதி சந்தியில் அமைந்துள்ள கடை ஒன்று தீப்பிடித்ததில் 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட சொத்துக்கள் எரிந்து நாசமாயின.

மின் ஒழுக்கு காரணமாகவே இத் தீ விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். [உ-8)

## கடூழிய சிறை

[யாழ்ப்பாணம்]

இடம் பெயர்ந்து வேறிடங்களில் வசிக்கும் முஸ்லிம்களின் வீடுகளின் ஓடுகளைத் திருடிய இருவருக்கு யாழ் நீதிமன்றம் 3 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கடூழியச் சிறைத்தண்டனையை வழங்கியுள்ளது. [உ-12]

## கணிதப்புத்தகம் எடுத்து வரப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்ட இலவச பாடநூல்களில் தரம்11இற்கான கணிதப் புத்தகங்கள் அடங்கவில்லை எனத் தெரியவந்துள்ளது. [உ-12]

## முதியவர் காயம்

யாழ்ப்பாணம்

துவிச்சக்கர வண்டியில் சென்ற முதியவரை குறுக்காய் பாய்ந்த மாடு மோதியதில் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரைநகரைச் சேர்ந்த கே.சாமிநாதன் (வயது 80) என்ற முதியவரே காயமடைந்தவராவார். [உ-2-6]

## மணிக் கோபுரம்

(நல்லூர்)

திருநெல்வேலி யாழ் பல்கலைக் கழகச் சந்திப்பிள்ளையார் ஆலயத்துக்குப் புதிய மணிக்கோபுரம் அமைக்கப் பெற்றுள்ளது. (உ-103)

நன்னடத்தைப் பயிற்சியின்போது

# தப்பியோடிய சிறுவன் திரும்பியதாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கானான் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் இருந்து தப்பியோடிய சிறுவன் கடந்த 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பராமரிப்பு நிலையத்திற்கு வந்து சேர்ந்துள்ளதாக யாழ்.நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

திருட்டுச் சம்பவம் ஒன்றில் குற்றவாளியாகஇனம் காணப்பட்டு நன்னடத்தைப் பயிற்சிக்காக யா/நீதிமன்றினால் கனான் சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட சிவலிங்கம் ஸ்ரீஸ்கந்தராசா என்ற சிறுவனே இவ்வாறு திரும்பிவந்ததாக அறிவக்கப்பட்டுள்ளது.

இதேசமயம்,

கடந்த 8ஆம் திகதி முதல் காணாமல் போயிருப்பதாக அறிவித்ததைத் தொடர்ந்து இச்சிறுவனைக் கைது செய்யுமாறு யாழ் நீதிமன்றம் கோப்பாய் பொலிஸார் ஊடாக பிடியாணை பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-12)

# நிறைவேற்று'அதிபர்களை நிரந்தர அதிபர்களாக்குக

## பிரதிக்கல்வியமைச்சர் உத்தரவு

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் நிறைவேற்றுஅதிபர்களாகக் கடமையாற்றும் அதிபர்களை நிரந்தரமாக்குமாறு பிரதிக்கல்வி அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்ல உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மாகாணக் கல்விச் செயலாளருக்கு பிரதிக்கல்வியமைச்சரால் மேற்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நிறைவேற்று அதிபர்களுக்கான உரிய நேர்முகப் பரீட்சையை உடன் நடத்தி அவர்களுக்கு நியமனத்தை பெற்றுக் கொடுக்க உதவுமாறும் பிரதிக்கல்வியமைச்சர் மாகாணக் கல்விச் செயலாளருக்கு அறிவித்துள்ளார். (இ)

# கிராம அலுவலரிடையே முகாமைத்துவ போட்டி

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களிற்கிடையில் 2001 ஆம் ஆண்டுக்கானமுகாமைத்துவப் போட்டி அண்மையில் இடம் பெற்றது.

மேற்படி போட்டியில் 1 ஆம் இடத்தை நயினாதீவு கிராம உத்தியோகத்தர் க. பொ. குலசிங்கம் 2 ஆம் இடத்தை மண்கும்பான் கிராம உத்தியோகத்தர் இரா. யோகேஸ்வரன் 3ஆம் இடத்தை புங்குடுதீவு மத்திய கிழக்கு கிராம உத்தியோகத்தர் செ. சிவா ஆகியோர் பெற்றுள்ளனர்

கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற பிரதேச செயலக கூட்டத்தில் மேற்படி தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பிரதேச செயலர் எஸ். இரத்தினம் தனது பாராட்டுதலை தெரிவித்தார். [உ-15]

# மிகிந்தலைப்பொலிஸாரால் குடும்பஸ்தர் கைது

(யாழ்ப்பாணம்)

மன்னாரிலிருந்து திருகோணமலை சென்ற குடும்பஸ்தர் ஒருவரை மிகிந்தலை பொலிஸார் கைது செய்துள்ளதாக பிரஸ்தாப நபரின் சகோதரிகளால் மனித உரிமைகள் ஆணைக் குழு யாழ் கிளையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் நானாட்டானில் வசித்து வருபவரான தாமோதரம் ஞானகுமார் (வயது30) என்பவரே கைது செய்யப் பட்டுள்ளார்.

இந்நபர் யாழ்ப்பாணம்வருவதற்காக திருமலை சென்றார் என்றும் மேலும் தெரிவிக்கப்படடுள்ளது. (உ-12)

# தகவல் தொழில் நுட்ப பூங்கா விரைவில் அமைப்பு

[யாழ்ப்பாணம்]

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் பேரில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா விரைவில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ளது.

இணைய சேவை சிறுவர் விளையாட்டுப் பகுதி, தகவல் தொழில்நுட்ப பயிற்சிநிலையம், தகவல் தொழிநுட்ப நூல் நிலையம், பொழுது போக்கும் பகுதி விற்பனைப் பகுதி, சுய முயற்சியில் பயிலல் வன் கூற்றுப பிரிவு, மென் கூற்றுப் பிரிவு என பல்வேறு பிரிவுகளைக் கொண்டு இத் தகவல் தொழிநுட்பப் பூங்கா இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## இந்தியாவிற்கு மனஆறுதல்

(கொழும்பு)

பிரிட்டன் வெளியிட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இந்தியாவிற்கு மன ஆறுதலைத் தந்துள்ளதாக ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகையில் எழுதப் பட்டுள்ள கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## சங்கரியின் செயலர் தாக்கப்பட்டார்

[கொழும்பு]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட எம்.பி.வீ ஆனந்த! சங்கரியின் செயலாளர் யாதவசங்கரி இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [செ]

# வர்த்தகத்துறையினருக்கு நிவாரண உதவிகள்

## ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

வர்த்தகத் துறையின் அபிவிருத்திக்காக அரசாங்கத்தால் முடிந்த சகல நிவாரணங்களையும் பெற்றுக் கொடுக்கப்போவதாகஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அந்தத் துறையைச் சார்ந்தோருக்கு உறுதி அளித்துள்ளார்.

நேற்று முன்தினம் இலங்கைத்தேசிய வர்த்தக சம்மேளனத்தின் தலைவர்கங்கா தலைமையில்வர்த்தகசமூகத்தினரை சந்தித்து நீண்ட நேரம் ஜனாதிபதி கலந்துரையாடியபோதே இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

வேலை கொள்வோர் சம்மேளனத்தின் தலைவர்கள் உள்ளிட்ட உயர் மட்டத் தலைவர்கள் பலரும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டுள்ளனர். (உ 4)

## பரீட்சார்த்த போட்டி

(கொழும்பு)

இலங்கைக்கு தற்போது விஜயம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையேயான டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகி 26ஆம் திகதி வரை காலியில் நடைபெறவுள்ளது. (உ)

# இஸ்ரேலில் தேசிய அரசாங்கம் அமைக்கும் முயற்சிக்கு கடும் எதிர்ப்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் தேசிய அரசாங்கம் அமைக்கும் இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோனின் முயற்சிக்கு அவரது கூட்டணிக்குள்ளேயே கடும் எதிர்ப்பு தோன்றியுள்ளது.

தேசிய அரசாங்கமொன்றை அமைக்கும் ஏரியல்ஷரோனின் முயற்சிக்கு இஸ்ரேலின் தொழிற்கட்சியும், பிரதமரின் வலதுசாரி கூட்டணியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகளும் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

இதேவேளை, தேசிய அரசாங்கமொன்றை அமைக்கும் ஏரியல் ஷரோனின் முயற்சிகட்கு ஆதரவு வழங்கியமைக்காக இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் எகுட்பராக்கிற்கு எதிராகவும் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

ஏரியல் ஷரோனின் லிக்குயிட் கட்சிக்கும், எகுட்பராக்கின் தொழில் கட்சிக்கும் இடையில் தேசிய அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக ஏற்பட்டுள்ள புரிந்துணர்வை மோசடியென நிதியமைச்சர் யோசிபெய்லின் வர்ணித்துள்ளார்.

பலஸ்தீனியர்களுடன் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதைச் சுலபமாக்குவதற்காகத் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் தனது திட்டத்திற்கு பூரண ஆதரவு தரும்படி ஷரோன் வேண்டுகோள் விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

## கடத்தலை கண்டுபிடிக்க நாய்கள் பயன்பாடு

[புதுடில்லி]

சந்தனமரக்கடத்தலைக் கண்டுபிடிக்க தமிழ் நாட்டில் முதன் முறையாக ஜேர்மன் நாட்டு நாய்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநில அரசின் நிதி உதவியுடன் திருவண்ணாமலை ஜவ்வாது மலைப் பகுதியில் நாய்களுக்குப் பயிற்சியளிப்பதற்கென சிறந்த பயிற்சிக் கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. [உ-7]

## அ. இ. அ. தி. மு. க.வுடன் காங்கிரஸ் இணைவு இன்னும் தீர்மானிக்கவில்லை

(சென்னை)

விடுதலைப் புலிகளை ஆதரித்து வரும் பாட்டாளி மக்கள் கட்சிக்கும் காங்கிரஸிற்கும் அடிப்படைக் கருத்து முரண்பாடுகள் இருப்பதால் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன்காங்கிரஸ் சேருவது பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லையென தமிழக காங்கிரஸ் தலைவர் எஸ். இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றி மேலும் கூறியதாவது,

அ.இ. அ. தி மு.க.கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சியை சேர்த்ததற்கு ஜெயலலிதா சரியான விளக்கமளித்த பின்னரே காங்கிரஸ்சேருவது பற்றி முடிவு செய்யப்படும் என அவர் கூறியுள்ளார் (உ-9]

## கிளின்டனின் சகோதரர் பொலிஸாரால் கைது

### போதைப் பொருள் பாவித்தாராம்

(வாஷிங்டன்)

முன்னாள்அமெரிக்கஜனாதிபதி கிளின்டனின் சகோதரன் ரோஜர் கிளின்ரன் போதைப் பொருள் பாவித்த குற்றத்திற்காக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப் பொருள் உட்கொண்ட நிலையில்வீதி சமிக்ஞைகளை கவனிக்காமல் கண்டபடி வாகனத்தைச் செலுத்தியதை அடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்பும்இவ்வாறானகுற்றத்திற்காக 30 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்ட போது கிளின்டனின் பதவிக்கால இறுதியில் மன்னிப்பு அளித்து விடுதலை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## காஷ்மீரில் மோதல் தீவிரவாதிகள் பலர் பலி

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீரில் நேற்று முன்தினம், இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் 8 தீவிரவாதிகள் மற்றும் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

காட்டுப்பகுதியில் நேற்று சென்ற படையினர் தீவிரவாதிகளைத் கண்டு தாக்குதல் நடத்தியதாகவும், அவர்களும் எதிர்த்து தாக்கியதாகவும் இந்திய பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேசமயம், கொல்லப்பட்ட 8 தீவிரவாதிகளும் வெளிநாட்டுக் கூலிப்படைகளாக இருக்கலாம்என கருதப்படுகிறது. உ-7)

## செய்திப்பரல்

★ இந்தோனேஷியாவின் மத்திய கல மண்டான் மாகாணத்தில் அண்மையில் இனக் கைகலப்பில் 8 பேருக்கு மேல் கொல்லப் பட்டனர்.

★ தாய்வானில் ஏற்பட்ட பூகம்பத்தால் ஒருவருக்கும் சேதம் ஏற்படவில்லை.

★ அவுஸ்திரேலியாவில் பயணிகள் பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் நால்வர் கொல்லப்பட்டு 14 பேர் காயமுற்றனர்.

★ சிரியாவில் ஜனாதிபதியின் கீழ் அமைக்கப்பட்ட சிவில் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. (உ-9)

## ஜப்பான்மீது குற்றமில்லை

(டோக்கியோ)

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஈடுபட்டமைக்காக ஜப்பான் மீது குறை கூற முடியாது என்றும் அமரிக்காவின் நிர்ப்பந்தமே இதற்கு காரணம் என்றும் ஜப்பானிய கீழ் சபையின் பட்ஜெட் கொமிற்றித் தலைவர் கூறியுள்ளார். [உ-9[

## பல்லாயிரம் யாத்திரீகர்

(ஜெருசலேம்)

பலஸ்தீன யாத்திரீகர்கள் சுமார் 15 ஆயிரம் பேர் இம்முறை புனிதஹஜ் கடமையை நிறைவேற்றும் வகையில் மக்கா செல்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது கடந்த காலங்களை விட இரட்டிப்பானதென்று பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-8)

## உலக தரிசனம்

## அமெரிக்க, பிரிட்டன் விமானங்கள் குண்டு வீச்சு பதிலடி கொடுக்க ஈராக் தயார்

[தெஹ்ரான்]

கடந்தவெள்ளியன்று ஈராக்கின் பல நிலைகள் மீதும் அமெரிக்க, பிரிட்டன் விமானங்கள் குண்டு வீச்சுநிகழ்த்தியதையடுத்து அமெரிக்க மற்றும் பிரிட்டன் விமானங்கள் மீது தாக்குதல் நடத்தப் போவதாக கடந்த சனியன்று ஈராக் எச்சரித்துள்ளது.

அமெரிக்காவின் மேற்படி ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் பலாபலனை அவை அனுபவித்தேதீரவேண்டும்எனவும் அமெரிக்கஜனாதிபதிஜோர்ஜ் டபிள்யூ புஸ்ஸுக்கு அவரது வரலாற்றில் மறக்க முடியாத பாடமொன்றை ஈராக் புகட்டவுள்ளதாகவும் ஈராக்கிய பிரபல பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை 1991 ஆம் ஆண்டுஈராக் குவைத்தைஆக்கிரமித்ததைத தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டுள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு ஈராக் கட்டுப்பட வேண்டும் என புஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார். (உ-9)

## காணாமற்போன 54 பேரின் உறவினர்களுக்கு மீண்டும் அழைப்பு

காணமற்போனோர் மற்றும் கடத்தப்பட்டோர் தொடர்பான விசாரணைகளுக்கென அழைக்கப்பட்ட 155 பேரில் சமுமளிக்கத் தவறிய 54 பேரின் உறவினர்களை இன்றைய தினம விசாரணைகளுக்குச் சமூகமளிக்குமாறு யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமல் அல்லது கடத்தப்பட்ட கீழ் வரும் 51பேரின் உறவினர்களே விசாரணைகளுக்காக மீளவும் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஜெகநாதன் ஜெனகன் [18 குமார வீதி நல்லூர் யாழ்ப்பாணம்] தவம ஜெகதீஸ் ஜெயதீபன் [இல.4 ஈச்சமோட்டை வீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணம்] கனகரட்ணம் நாகேந்திரன் [மீசாலை வடக்கு மீசாலை] கணபதிப்பிள்ளை யோகராஜா [அச்சுவேலி வடக்கு அச்சுவேலி] வேதநாயகம் ஜெறோம் இம்மியானன் [கொட்டடி வீதி குருநகர்] சின்னையா சோமகாந்தன் ராஜ் [சுன்னாகம் வீதி யாழ்ப்பாணம்,] பொன்னன் ரவீந்திரன் [கைதடிச் சந்தி யாழ்.] செல்வராஜா பிரகாசன் [கோயிலாக்கண்டி ச்சன் தாப்பு கைதடி] கேது உதயகுமார் [16/2 லோட்டஸ் வீதி வண்ணார் பண்ணையாழ்] [யோன் பிள்ளை அன்ரன் அமலநாதன் [நாவற்குழி கைதடி மாஸ்டர் கிருபாகரன் [கைதடி நாவற்குழி வடக்கு] கதிரவேலுப்பிள்ளை கேதீஸ்வரன் [கைதடி நவாற்குழி] கதிரவேலு விஜேந்திரன் [சரசாலை தெற்கு சாவகச்சேரி] சதாசிவ விவேகானந்தன் [சாவகச்சேரி இம்மானுவேல் மேரி ஜெயசீலன் [பாடசாலைவீதிநாவற்குழிகைதடி] மூத்ததம்பி பிரதீஸ் குமார் புத்தூர் கிழக்கு, செல்வரட்ணம் தவநாதன் 44/15 சங்கிலியன் வீதி நல்லூர், அப்புத்துரை ஜெயராஜன் கோண்டாவில் வீதி திருநெல்வேலி, குமுதினி உதயராஜன் புன்னாலைக் கட்டுவன், இளையதம்பி திருஞானச் சந்திரன் மந்துவில் கிழக்கு கொடிகாமம். பொன்னையா ஜெயராசா நாவற்குழி தெற்கு கைதடி, சிவகுருநாதன் ஆனந்தகிருஸ்ணன் அம்மன் வீதி பத்தர் கோயிலடி திருநெல்வேலி கிழக்கு, சுப்பிரமணியம் மகேந்திரன் 132, கஸ்தூரியார்வீதி யாழ்ப்பாணம், கண்ணதாஷன் ஞானகரன் விடத்தற்பளை மிருசுவில், பத்மநாதன் சுதர்ஷன் நுணாவில் மேற்குசாவகச்சேரி, வேலன் இரத்தினசிங்கம் ஐயனார் கோவிலடி புன்னாலைக்கட்டுவன் வடக்கு, இலங்கநாதன் ஜெகதீஸ்வரன் நல்லூர் யாழ்ப்பாணம், அந்தோனி நேசராஜ் குளமங்கால் மல்லாகம், பழனி சுரேஸ்வரன், சுரேஸ்வரன் சுமதி நெடுங்குளம் வீதி கொழும்புத்துறை, தங்கத்துரை ஏ. வி. வீதி ] அரியாலை கைதடி, பூபாலசிங்கம் ஜெயலலிதா மறவன் புலோ சாவகச்சேரி, ராஜதுரைசுரேஸ்குமார் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம், செல்வரட்ணம் அருணன் கோண்டாவில் மேற்கு கோண்டாவில், சின்னத்துரை கதிரவேலுப்பிள்ளை கப்பூது கரவெட்டி, வல்லிபுரம் பாஸ்கரன் மறவன்புலோ கிழக்கு சாவகச்சேரி, திருஞாவுக்கரசு சுதாகரன் இல 1 மத்திய கிழக்கு வீதி சாவகச்சேரி, பற்றிக் அல்போன்சு, அலியார்ஜெகநாதன், இல01மத்தியகிழக்குவீதி குருநகர், இயன் பிள்ளை கிருபன் கைதடிவீதி நுணாவில், சரவண முத்து சிறிதரன் பளை வைக்கால் மிருசுவில், தம்பிப்பிள்ளை கோவிந்தசாமி அரியாலை வீதி சங்கானை யாழ்ப்பாணம், பி.ராஜேந்திரகுமார் அத்தாசி,அல்வாய், துரைராஜ் தஷியன் சுதுமலை தெற்கு மானிப்பாய், அல்போன்சு அன்ரனி இல01 மத்திய கிழக்கு வீதிகுருநகர், ரத்தினம் கிருஷ்ணகுமார் தொல்புரம்மேற்கு சுழிபுரம், பரமேஸ்வரன்குமுதுனி பி.பரணிதரன், பாடசாலை ஒழுங்கை சங்கரத்தை வட்டுக்கோட்டை,

ஜீவநாசி மகுலதன் தொல்புரம் சுழிபுரம், தனானந்தன் ரவீந்திரன், இல 87/1 பிரதான வீதி யாழ்ப்பாணம், ஐலேஸ்வரன் அமலராஜ் அக்கராயன்குளம் கிளிநொச்சி, முத்துத்தம்பிகெங்காதரன்கமலாசினி ஒழுங்கை சரசாலை தெற்கு சாவகச்சேரி, அப்புத்துரை சிறீஸ்வரன் 112/1 மோகனதாஸ்வீதி சந்திரபுரம் சாவகச்சேரி, நடராஜா புதிய ராஜா கோப்பாய்மத்திபுனித ஜோசப் கோயிலடி, கோப்பாய், பண்டாரரத்தினம் செல்வகுமார் தச்சன்தோப்பு கைதடி சாவகச்சேரி, சின்னத்தம்பி ஜெயபாலன் தெல்லிப்பழை பன்னாலை, செல்லத்துரை குமார் பூங்கா வீதி றெக்ளமேஷன் குருநகர்: (உ-12).

## மாணவர்களிடையே...

[7ஆம் பக்கத் தொடர்ச்சி]

பதிவுசெய்து இருந்தனர். உலக சாரணியம் ஐந்துபிராந்தியங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இலங்கை உள்ளிட்ட ஆசியபசுபிக் பிராந்தியத்தின் தலைமையகம் பிலிப்பீன்சு நாட்டின் தலை நகரான மணிலாவில் அமைந்துள்ளது.

### இலங்கையில் அண்மைக்கால நிகழ்வுகள்

பாடசாலைகளில் சாரணர் அணிகளை உருவாக்கி சிறந்த முறையில் பயிற்றுவிப்பதற்கு சாரணர் தலைவர்களைஉருவாக்கவேண்டிய தேவை உள்ளது. இலங்கையில் சாரணர் தலைவர்களை பயிற்றுவிக்கும் ஒருஇடமாக நுவரேலியா மாவட்டத்திலுள்ள பீதுருதாலகால எஸ்ரேற் இல் அமைந்துள்ள சாரணர் பயிற்சி முகாம் உள்ளது. இங்கு 1999 இல் தமிழ்மொழி மூலமான பயிற்சி இறுதியாக வழங்கப்பட்டது. இது சாரணத் தலைவர்களுக்கான பயிற்சியில் 96 வது பயிற்சியாகும். இப்பயிற்சியை வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்தும் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் கலந்து கொண்ட 33 சாரணத் தலைவர்கள் பெற்றுக்கொண்டனர்.

தேசிய பயிற்சி ஆணையாளர் ஜெரால்ட் குரே, பிரதிப்பணிப்பாளர் வி. குணரட்ணம் பருத்தித்துறை மாவட்ட ஆணையாளர் கே. செல்வவிநாயகம், எஸ்.செல்வநாயகம், ரி.சிதம்பரம் [மாத்தளை] வி. தர்மலிங்கம் (பதுளை) டி எல்.சிறிவர்த்தனா [நுவரேலியா] மொகமட் ஹாசிம்[கல்முனை] ஆகியோர் இணைந்து செயற்பட்டனர். பயிற்சியில் ஈடுபட்ட யாழ்ப்பாணமாவட்ட, கிளிநொச்சி மாவட்ட சாரணர் தலைவர்கள் அதன்பின் மொறட்டுவை பிறின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியில் நடைபெற்ற சாரணர் போட்டிப் பாசறை விழாவிலும் பங்குபற்றித் திரும்பினர். தென்மராட்சி, கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் சாரணர் அணிகள் வருடாந்தம் தமது போட்டி நிகழ்ச்சிகளை கைதடி நவீல்ட் பாடசாலையில் நடத்திவருகின்றனர். தற்போதைய தென்மராட்சி பாடசாலைகள்இடம்பெயர்ந்துள்ள சூழ்நிலையில் சாரணர் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் தீது

குறள்

## வலம்புரி

### பாராமுகம் எதற்காக?

2000ம் ஆண்டளவில் நடைபெற்ற 5-ம் தர புலமைப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற வல்வை சிவகுரு வித்தியாலய மாணவன் சிவரூபனின் ஜப்பான் பயணத்தில் மோசடி நிகழ்ந்தது பற்றி இப்பகுதியில் 18ந்திகதி பிரஸ்தாபித்திருந்தோம். ஆனால் இதுவரை கல்வித்திணைக்களம் எந்தவிதமான நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

கல்வித் திணைக்களம் தான் கவனிக்கவில்லை என்றால் யாழ். மாவட்டத்தின் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்களும் அதுபற்றி எதுவும் அலட்டிக்கொள்ளவில்லை என்பதை எண்ணும் போது வேதனையே மிச்சமாகிறது. தந்தையைஇளமையில் இழந்த அந்த ஏழைமாணவன் தனது முயற்சியால் யாழ்.மாவட்டத்திற்குப் பெருமை தேடித்தந்துள்ளான் அல்லவா? அப்படியிருந்தும் ஏழை என்பதால் எவரும் இதில் இறங்கினால் நமக்கென்ன லாபம் என்று இருந்து விட்டார்கள் போலும்.

யாழ். மாவட்டத்தில் புலமைப் பரீட்சையில் இரண்டாம் இடத்தைப் பெற்ற டொண் பொஸ்கோ மாணவி ஜப்பானுக்குச் செல்லும் அனுமதியைப் பெற முதலாம் இடத்தைப் பெற்ற மாணவனுக்குத் துரோகம் இழைக்கப்பட்டுள்ளதெனில், சம நீதி எது- சமத்துவம் எது என்பதைப் புரிந்து கொள்ளமுடியாதுள்ளது. அதுமட்டுமன்றி இன்றுவரை மாணவன் சிவரூபனின் ஜப்பான் பயணத்துக்குத் தடையாக இருந்தவர் யார் என்பதை எமது தமிழ் மண்ணிலிருந்து அறியமுடியவில்லை ஆயின், கல்வித்திணைக்களங்களின் நிர்வாக மகோன்னதம் எப்படியிருக்கிறது என்பதைச் சற்றுச்சிந்திப்பது நாளை நமக்கு என்ற நிலையைத் தவிர்க்க உதவும்.

அதேவேளை அரசியல் வாதிகள் பணக்கார வர்க்கமென்றால் உதவுவார்களே ஒழிய ஏழையென்றால் தேர்தல் காலத்தில் மட்டும் தான் தேடுவார்கள். அதன் பின் உன்னைக்கண்டன் சந்தையில் என்பதுதான் முடிவு என்பதையும் ஏழைகள் உணர்ந்து கொண்டால் மீண்டும் அந்த உத்தமர்கள் வீட்டு வாசலைத் திறக்கும் போது தெளிவாகக் கூறலாம்.

# மகத்தான சேவையால் மக்கள் மனங்கவர்ந்த

# மாண்புறு மனிதர் அமரர் மாணிக்கவாசகர்

இந்த உலகிலே எல்லோரும் பிறக்கிறார்கள், இறக்கிறார்கள் ஆனால் சிலர் மட்டுமே வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுத்துவிட்டுச் செல்கிறார்கள். வாழ்விற்கு இலக்கணமாய் வாழ்ந்து, உன்னதம் அடைந்தவர் ஒரு சிலரே!

இந்தவகையில் பிறந்தவர் தான் அமரர் கார்த்திகேசு மாணிக்கவாசகர்.

### மானிப்பாய் மண்ணில்

28.2.1934 இல் மானிப்பாயில் பிறந்த இவரின் ஆரம்பகால வாழ்க்கை வசந்தங்களை வழங்காவிடினும் முயற்சியின் மூலம் உன்னத நிலை எய்தியவர். இவர் தனதுஆரம்பக் கல்வியினை மானிப்பாய்

### மறைந்தார் மாண்பு

இந்துக் கல்லூரியில் பெற்று உயர் கல்வியை யாழ். மத்திய கல்லூரியில் தொடர்ந்தார். உண்மையான கல்வி என்பது ஒருவரில் எவ்வாறு ஒழுக்கத்தை உண்டுபண்ணுகிறதென்பதை இவர் தன் வாழ்க்கை மூலம் உணர்த்தி, கற்ற பாடசாலைகளுக்குப் பெருமை சேர்த்தார். பூக்களைக் சூடிக்கொண்டு பூமரங்கள் புளகாங்கிதம் அடைவது போல இவர் கற்றபாடசாலைகளும் இவரின் மூலம் பெருமையைத் தேடிக்கொண்டன. வேர்விட்டுக் கிளைபரப்பிய அந்தஆலமரங்கள் இரண்டும் இந்த விழுதின் மூலமாகவும் தங்களுக்கு விலாசமிட்டுக் கொண்டன.

### எழுதுவினைஞரானார்

கல்வியில் சிறந்து விளங்கிய இவரிற்கு 1949 ஆம் ஆண்டு இவரின் 16 ஆவது வயதிலேயே கொழும்பில் அரச திணைக்களம் ஒன்றில் எழுதுவினைஞர் பதவி வழங்கப்பட்டது. சமூகத்தின் மீதும் குடும்பத்தின் மீதும் அதீத பற்றுக் கொண்ட அமரர் தனது உயர் கல்வி வாய்ப்புக்களையும் உதறிவிட்டு சேவையில் இணைந்தார். இயல்பாகவே உதவும் மனப்பாண்மையை கொண்டிருந்ததால் கல்வி கற்கும் காலங்களிலேயே பாடசாலையினூடாகப் பல சமூகப் பணிகளில் ஈடுபட்டு நாட்டிற்கும் வீட்டிற்கும் பெருமை சேர்க்க இவர் எழுதுவினைஞர்சேவையிலிருந்தேபடிப்படியாக உயரத் தொடங்கினார்.

### உதவி அரசாங்க அதிபர்

இதற்கிடையில் 1965 ஆம் ஆண்டு கோப்பாயில் யோகேஸ்வரிஎன்பவரைத்திருமணம் செய்து இலவாழ்க்கையின் இலக்கணங்களுக்கமைய தனது வாழ்க்கைத் தேரை ஓட்டிச் சென்றார். கல்வியிலே இடைவிடாதபற்றுக் கொண்ட அமரர் இலங்கை அரசாங்கம் நடத்திய உயர் பரீட்சையான நிர்வாக சேவைப்பரீட்சையிலும் சித்தி அடைந்து உதவி அரசாங்க அதிபராக நியமனம் பெற்றார். அவர் மன்னார், தம்பலகாமம், கரவெட்டி, கோப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றினார். இவரின் தூய சேவைக்கும் திறமைக்கும் பரிசாக 1989 இல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பதவி வழங்கப்பட்டு, 1990 இல் கிளிநொச்சிக்கு மாற்றலாகச்சென்று, மீண்டும் 1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் தனது தூய பணியைத் தொடர்ந்தார். இந்நிலையில் உடல் நலக் குறைவு காரணமாக 1994 ஆம் ஆண்டு தனது சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.

### சேவையால் சிறப்பெய்தியவர்

மனிதநேயம், கடமையுணர்வு, நிர்வாகச்சிறப்பு ஆல் போல் விரிந்து பரந்த இறைநுகர்ப்பாங்கு, பிறர் தமர் பாராப் பெருந்தன்மை, ஊழியர்மீது கொண்ட உள்ளன்பு, உயர்நிர்வாகப் பேராண்மை இத்தனை இயல்புகளையும் தன்னில் இயல்பாகவே கொண்ட உத்தமர் மாணிக்கவாசகர், பணிபுரிந்த இடங்களிலெல்லாம் பரந்து விரிந்த இவரின் சேவைக் கரங்களுக்குள் உதவிபெற்ற மக்களுள் உள்ளத்தில் இந்த உன்னதமானவர்க்கு ஓர் இடம் ஒதுக்கப்பட்டே இருக்கிறது. தம் கருமங்களை இறைவனிட்ட பணியெனத் தம்பணி தவறாது, தக்கோனாய் வாழ்ந்து சிறந்தவர். 'தன் னெஞ்சறிவது பொய்யற்க' என்ற தத்துவப் பேராளனாய் வையகம் பயனுற வாழ்ந்த மனிதம் நிரம்பிய மனிதன்இவர்.

### உற்றவிடத் துதவியவர்

குறைவில்லாச் செல்வம் கொண்டாலும் கொடுக்கும் மனம் வேண்டும்என்பார்கள். தனது ஆரம்பகால வாழ்க்கையை கரடுமுரடான பாதையில் ஆரம்பித்ததால் கஷ்டம் என்ற சொல்லின் பொருளுணர்ந்து, நாடி வந்தோர்க்கெல்லாம் நயம்பட உதவிசெய்தார். 1990, 91 காலப்பகுதியில் கிளிநொச்சி அரச அதிபராக இருந்த போது மிகவும் இக்கட்டான சூழலிலே அமரரின் சேவையில் அப்பிரதேசம் புதுப் பொலிவுபெற்றது. 1991 இன் பின்பு யாழ். அர அதிபராக இருந்து அந்த அசாதாரண சூழ்நிலையில் அத்தியாவசிய பொருட்கள், சேவைகள் அனைத்தையும் இயன்றளவு பெற்றுக்கொடுத்த இவரின் சேவையை மக்கள் என்றும் மறவார்கள். வேலையற்றிருந்த எத்தனையோ இளைஞர் யுவதிகட்கு இவரின் முயற்சியால் வேலைகிட்டியது இவ்வாறு சேவையே தனது தேவையாக வாழ்ந்தவர் மாணிக்கவாசகர்.

### நிறைபுகழ் எய்தினார்

இவர் எம்மைச்சேர்ந்தவர், இவர்பிறரைச்சேர்ந்தவர் என்றெண்ணாது நிலையிழந்த மக்களின் இன்னலைத் தாமே அடைந்ததால்எண்ணி, அவர்தம் துன்பம் தீர்ப்பவனே அனைவர் மத்தியிலும் தலைவராக தகுதிபடைத்தவர் என்கிறது நாலடியார். இதற்குமிகவும் பொருத்தமாக வாழ்ந்து இதயசுத்தியுடன் தாம் சம்பாதித்த செல்வாக்கின் ஒளிபெருக, 'உன்னதமானவர்' என்ற மக்களின் உயர்பட்டம் பெற்று மண்புலரப்பணி புரிந்துமனிதமனங்களுக்குள் மாணிக்கமாக மறைந்தபெருந்தகையே அமரர் மாணிக்க வாசகர்.

''தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று'' திருக்குறள்.

**நீ. நீ.மயூரன்**

# மாணவர்களிடையே மாபெரும் ஊக்குவிப்பை

# ஏற்படுத்தும் உன்னதமான சாரணர் சேவை

இன்று உலகசாரணர் தினத்தையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது

ஆ-ர்

சாரணீயம் 1907 இல் இங்கிலாந்தில் ஆரம்பமாகி மற்றைய நாடுகளுக்கும் பரவியது. 1920 இல் உலக சாரணர்சபை உதயமானது. அத்துடன் உலக சாரணர் பணிமனையும்ஸ்தாபிக்கப்பட்டது இதன் ஸ்தாபகர் பேடன் பவல் பிரபு இறந்தபின்னர் இச்சபை உலக சாரணர்களின் பெரும் பொறுப்பை ஏற்று நடத்துகிறது. உலக சாரணர் சபையுடன் ஒரு 'தேசிய சாரணசங்கம்' இணைவதற்குப் பின்வரும் அடிப்படைத்தத்துவங்களை ஏற்று நடக்கவேண்டும்:

★ சமயத்திற்கான கடமை, நாட்டுப்பற்று, உலக சகோதரத்துவம், பிறர்க்கு உதவி, விதியும்வாக்குறுதியும், இஷ்டபூர்வமான அங்கத்துவம், அரசியல் பற்றின்மை, வெளிப்புறவாழ்க்கை.

### விதிகளும் வாக்குறுதியும்

★ சாரணியத்தைப் புரிந்து கொள்வதற்கு அதன் விதிகளையும் வாக்குறுதியையும் நன்கு விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். பத்து விதிகள் உள்ளன. சாரணன் நம்பத்தகுந்தவன், பற்றுறுதி உடையவன், நேசமும் மரியாதையும் உடையவன், மற்றெந்த சாரணனுக்கும் சகோதரன், வீரம் உள்ளவன். பிராணிகளின் தோழன், ஒத்துழைப்பவன், மனமகிழ்ச்சி உடையவன், சிக்கன மானவன், எண்ணம் சொல் செயல் இவைகளில் தூய்மையானவன் என்பனவே அவை.

வாக்குறுதி:- 'என்னால் கூடுமானவரை என் சமயத்திற்கும் நாட்டிற்கும் என் சாரணர் கடமைகளைச் செய்யவும், எக்காலத்திலும் பிறர்க்கு உதவிபுரியவும், சாரணர் விதிகளுக்கு அமைந்து பணிந்து நடக்கவும், என் கௌரவத்தின் மீது நான் சத்தியம் செய்கிறேன்,' என்பதே யாகும்.

### இலங்கையில் முத்திரை

★ இலங்கையில் எல்லா மாவட்டங்களிலும் பாடசாலைச் சாரணர் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக செயலாற்றிவருகின்றன. 17-02-98இல் கண்டியில் ஒரு தேசிய ஜம்போறி இடம்பெற்றது. அதனையொட்டி தபால் திணைக்களம் முத்திரை ஒன்றையும் வெளியிட்டது.

### சாரணியம் வளர்ச்சி

சாரணியத்தின் தந்தை ரொபேட் ஸ்ரீவின்சன் ஸ்மித் பேடன் பவல் ஆவார். இவர் 22-02-1857 இல் இங்கிலாந்தில் பிறந்தார். இவரின் சகோதரி செல்வி அக்னெஸ் பேடன் பவல் 1912 இல் பெண்கள் சாரணியத்தை ஆரம்பித்தார். பவல் பிரபுவின் மனைவி லேடிபேடன் பவல் 22-02-1889 இல் பிறந்தார். இலங்கையில் 1912 இல் மாத்தளை கிறிஸ்ற் சேச் கொலிச் இல் ஆரம்பமானது. 1916 இல் யாழ்ப்பாணத்தில் ஐந்து பிரபல பாடசாலைகளில் இது தொடங்கப்பெற்றது. பவல் பிரபு 08-01-1941 இல் காலமானார். லேடி பேடன் பவல் அவர்கள் 26-06-1972 இல் காலமானார்.

1995 ஆம் ஆண்டு 144 நாடுகளைச் சேர்ந்த மூன்று கோடி பேர் சாரணர்களாக

(6ஆம் பக்கம் பார்க்க)

**சி. ஜெயகணேஷன்**

## சாயி அருளமுதம்



நான் எளிமையை விரும்புகிறேன். ஓர் இனிய வார்த்தைக்காகவோ, ஒரு சிறு சேவைக்காகவோ ஓர்உதவிக் கரத்துக்காகவோ என்னை நாடுபவர்களின் உற்சாகத்தைக் குறைக்கும் தன்மை கொண்டிராத உடையையே நான் விரும்புகிறேன். உடை தூய்மையானதாகவும், பண்பாட்டிற் கேற்றதாகவும் அமைந்திருக்க வேண்டும். பிறதேசத்திற் குரியதாகவோ, விசித்திரமானதாகவோ அது அமையக்கூடாது. மற்றவர்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக உடை அணியக்கூடாது: சுத்தமான சௌகரியமான உடைகள் உடம்புக்குத் தேவையென நீங்கள் எவ்வாறு ஆசைப்படுகிறீர்களோ அதேபோல மனத்திற்குச் சாந்தி கொடுக்கும் தூய அப்பியாசங்களான ஜபம், தியானம் போன்றவற்றிற்காகவும் அவாவுறுங்கள்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

மங்கையர் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள
**நியூ நகுலா ஜுவல்லறி**
74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
[கி-1500]

### மூன்று . . .

ஈடுபடவும் ஆயர்குழு திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இரத்தினபுரி ஆயர் மல்கம் ரஞ்சித், மன்னார் ஆயர் இராசப்பு யோசெப், யாழ். ஆயர் தோமஸ்சௌந்தரநாயகம் ஆகிய மூவருமே ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளனர். (இ)

### புலிகளின்

முன்னர் அரசு அறிவிக்க வேண்டும்.

எமது வன்னிக்கான சமாதான பாத யாத்திரையின் போது விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனையே சந்திப்பதற்கு முயற்சி செய்தோம். இந்நிலையில் தமிழ்ச் செல்வன் எம்மைச் சந்திப்பதற்குத் தயாராக இருந்தார் என்றும் இச்சந்திப்பு 19 ஆம் திகதி 11மணிக்கு இடம்பெறுவதாக இருந்தபோதும், எமது பிரயாணத்தில் ஏற்பட்ட தடங்கல் காரணமாக ஒரு மணிக்கு அங்கு செல்ல முடிந்தது. இதனால் தமிழ்ச்செல்வனைச் சந்திக்க முடியவில்லை. ஆனால் அவரின் நிர்வாகச் செயலாளர் சுதா, புலிகளின் சர்வதேச, கல்விப் பொறுப்பாளர்ஜோர்ஜ் புலித்தேவன், மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் கணேசமூர்த்தி ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம் என்று கும்புறுகமுகே வஜ்ஜிர தேரர் தெரிவித்தார். (ம)

## புலிகளே தமது "தலைவர்கள்" என்பதை
# தமிழ் மக்கள் ஏற்றுள்ளனர்!
## பி. பி. ஸி. ஆய்வாளர் கருத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளே தமது தலைமைத்துவம் என தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இதன் வெளிப்பாடே பிரித்தானிய அரசு விடுதலைப் புலிகளைத் தடை செய்யக்கூடாதென தமிழ்ப் பகுதியெங்கும் ஓங்கி ஒலிக்கும் குரல்களாகும்.

இவ்வாறு லண்டன் பி.பி.சியின் உலக சேவைக்கு அச் சேவையின் இலங்கை முகவர் பிரான்சிஸ் ஹரிசன் வழங்கிய ஆய்வுக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அவ் ஆய்வுக் குறிப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

விடுதலைப் புலிகளை பிரித்தானியா தடை செய்யக்கூடாதென இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் தமது கருத்தை உரக்கத் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய தமிழ்மக்களின் கருத்துக்கள் விடுதலைப் புலிகளின் இலட்சியத்திற்கு ஆதரவாக உள்ளது.

விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு பேச்சுக்களை ஆரம்பிக்க சர்வதேச சமூகம் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென தமிழ் மக்களின் இதயக்குரல்கள் வலியுறுத்துகின்றன.

வடக்குக் கிழக்கில் பரவலாக புலிகளோடு பேச்சை ஆரம்பிக்குமாறும், பிரித்தானியா புலிகளைத் தடை செய்ய வேண்டாமெனவும் கோரி தமிழ் மக்கள் மத்தியில் புதிய கருத்துக்கள் ஏற்பட்டுள்ளது இதன் விளைவு பல்கலைக் கழகசமூகம் மாணவர்கள் தொண்டர் அமைப்புக்கள் மற்றும் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்தும் சமாதானத்தை வலியுறுத்தியும் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதன் வெளிப்பாடுகளே பொங்குதமிழ் நிகழ்வுகள் மற்றும் கையொப்பம் சேகரிப்பு நடவடிக்கையாகும்.

மட்டக்களப்பு பல்கலைக் கழக சமூகம் நடாத்திய பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் கொடும்பாவி எரிக்கப்பட்ட செயல் தமிழரான இவர் தமிழ் சமூகத்திற்கு துரோகம் இழைத்தவர் என்பதையேகாட்டிநிற்கிறது என்று தெரிவித்த ஹரிசன் விடுதலைப் புலிகளைத் தமது தலைமையாக தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளதையே இந்நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன வென்றும் தெரிவித்துள்ளார். [இ

## வன்னி மீது
# பொருளாதாரத் தடை பொருள் விலை ஏற்றம்

(வவுனியா)

வன்னிப்பிரதேசம் மீதான பொருளாதாரத் தடை காரணமாக அங்கு பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளது

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யின் விலை 125 ரூபாவாகவும், சைக்கிள் ரயர்ரியூப் 1,500 ரூபாவாகவும் விற்கப்படுகின்றது

இந்நிலையில் மாணவர்கள் இரவில் படிக்கமுடியாது கல்வியில் பின்தங்கி உள்ளதாகவும், முகாமில் வசிக்கும் சிறுவர்கள் ஒருவேளை உணவிற்காக தவிப்பதாகவும் வன்னித் தகவல் தெரிவிக்கின்றன: (ந-5

### ஆறு - -

நிதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு மீது மேற்கொள்ளும் பழிவாங்கல் நடவடிக்கையே இதுவென்றும், கொழும்பிலும் திருகோணமலையிலும் சுகபோகம் அனுபவித்தவர்கள் இன்று ஷெல், பொம்மர் குண்டுவீச்சின் மத்தியிமகப்பேற்று நிலையங்களை வேலையால் நிறுத்திவிட்டார்களென்றும் தெரிவித்தார். (ந)

### யாழ் நகரில் - - -

இதேவேளை தீபரவியமைக்கு மின்ஒழுக்கு காரணமாகஇருக்கலாம என்றுசந்தேகத்தின்பேரில் அக்கடைத் தொகுதிகளுக்கான மின்வினியோகம் உடனடியாகவே துண்டிக்கப்பட்டது. (வ)

### பாலசிங்கம் . . .

நள்ளிரவு 12 மணியுடன் புலிகளின் ஒரு தலைப் பட்சமான யுத்த நிறுத்தம் முடிவடையவிரும்புவதால் மேலும் அதனைநீடிக்குமாறும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்பமிடுவது தொடர்பாகவும் இருவரும் மனம்திறந்துபேசியதாக லண்டன் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை புலிகளின் யுத்த நிறுத்தம் முடிவடைவதற்கு முன்னர், இலங்கை—அரசுடன் மீண்டும் பேச்சு நடத்த எரிக்சோல் ஹெய்ம் ஜனாதிபதி இந்தியா சென்று திரும்பியவுடன் கொழும்புவரலாமெனஇராஜதந்திரவட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

### இந்தியத் தலைவர்களுடன் ஜனாதிபதி ஆலோசனை

இதேவேளை இன்று இந்தியாவுக்குப் புறப்பட்டுச் செல்லும் ஜனாதிபதி சந்திரிகா இந்தியத் தலைவர்களுடன் நோர்வேயின் சமாதான முயற்சியின் தற்போதைய நிலவரம் தொடர்பாகவும், நோர்வேயின் புரிந்துணர்வு தொடர்பாகவும் ஆலோசனை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவில் 5 நாட்கள் தங்கியிருக்கும் போது நோர்வே தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் கொழும்பு வரும் வழியில் இந்தியா சென்று இந்திய வெளியுறவு அமைச்சருடன் சந்தித்து பேசுவார் என இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### முத்தரப்புபேச்சு ?

இது இவ்வாறு இருக்க ஜனாதிபதி இந்தியாவிஷயத்தை முடித்துக்கொண்டு நாடுதிரும்பினும் யாழ், மன்னார், இரத்தினபுரி மாவட்ட ஆயர்கள் ஜனாதிபதியைச் சந்தித்துப்பேசவிருப்பதாலும் நோர்வே தூதுவர் கொழும்பில் தங்கியிருக்கும் போது ஆயர்களும் அவரைச் சந்தித்து பேசவுள்ளன எனவும்செய்திகள்தெரிவிக்கின்றன. (வ)

கண்ணைக்கவரும் தங்க
நகைகளை
உங்கள் எண்ணம் போல்
செய்து தருபவர்கள்
**சாரங்கா நகைமாடம்**
177/4. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-1503]

### மனைவியைக் கொன்ற பொலிஸ்

(கொழும்பு)

குணப்படுத்த முடியாத நோயினால் அவதியுற்றதனது மனைவியை ''குத்தகைக் கொலைகாரர்கள்'' மூலம் கொலை செய்வித்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை களுத்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நோயிலிருந்து குணப்பட முடியாத தனது மனைவியை கொலை செய்வதற்கு குத்தகைக் கொலைகாரர்களுக்கு பதினையாயிரம் ரூபாவை வழங்கியதாசு பொலிஸ் கான்ஸ்டபிள் களுவாராட்சி பொலிஸ் விசாரணையின்போது தெரிவித்தார், (ந-5

### விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர் நடிகர் விஜயகுமாரதுங்காவின் கொலை தொடர்பாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது;

கொழும்புகோட்டை மஜிஸ்திரேட்டும் மேலதிக மாவட்ட நீதவானுமாகிய பிரியந்த பனாண்டோ நேற்று முன்தினம் இதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்தார்:

விஜயகுமாரதுங்க கொலைச் சந்தேக நபர்களான தர்சான் வீரசிங்க மற்றும் லயனல் ஆகிய இரண்டுபேரும் கைது செய்யப்பட்ட வேளையில் தர்சான் என்பவர் பொலிஸ் தடுப்புக் காவலில் இருந்த வேளையில் காணாமல்போயிருந்தார்.

இவர் காணாமல் போனது தொடர்பாகவே உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கைது செய்யப்பட்டுள்ளார்,

இதேவேளை இப் படுகொலை தொடர்பாகவாகன உதிரிப்பாக விற்பனைநிலைய உரிமையாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (ந-5)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



இன்று (22-02-2001) அகவை அறுபதைப் பூர்த்தி செய்து கூட்டுறவுச் சேவையில் நீண்டகாலம் பணி புரிந்து இளைப்பாறும் நல்லூர்ப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் களஞ்சியப் பொறுப்பாரும் (Store Keeper M. p. C S., Nallur.) எமது நண்பரும் கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட **திரு. சின்னத்துரை புவனேந்திரன்** அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரின் சேவைகள் நாட்டிற்கு மேன்மேலும்தொடர எல்லாம் வல்ல இறைவன் நீண்ட ஆயுளை அளிக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்,

நன்றி

**திரு. வினாசித்தம்பி கனகநாயகம் அவர்கள்**
**தருமதி இந்திரசேனா கனகநாயகம் அவர்கள்**

**வி. கனகநாயகம்**
'துரைமலர்ப் பொய்கை';
இணுவில் மேற்கு,
இணுவில்.
(கி 1514)

அதி நவீன
கருவிகள் மூலம்
ஒலிப்பதிவு செய்திடவும்
வீடியோ, ஸ்ரூடியோ,
மணப்பந்தல்
சேவைகளுக்கும்,
**மேகாஸ் வீடியோ அன் ஓடியோ**
23, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1495)

**ஸ்ரீ செல்வா**
(யாழ்ப்பாணம்)
பிரசாந் - ஷாலினி
நடித்த
**பிரியாத வரம் வேண்டும்**
10-30, 2-30 (ப. நே)
(புதிய வெளியீடு)
CD பிரதி
(கி/1482)

**வர்த்தகர்களே!**
வீட்டுப்பாவனைக்கான
'பிலிப்ஸ்', 'ரங்ஸ்ரம்' பல்புகள்
மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வந்துள்ளன.
25 வாற்ஸ் இலிருந்து 100 வாற்ஸ் வரை
குறிப்பிட்டளவு கையிருப்பு உண்டு.
வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.
**'நியூற்றோன் எலக்ரிக்கல்ஸ்'**
141, 143, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2037
(கி/1513)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது;